بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ نَحْمَدُہٗ وَنُصَلِّیْ عَلٰی رَسُوْلِہِ الْکَرِیْمِ وَعَلٰی عَبْدِہِ الْمَسِیْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 7

இதழ் 18

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

03 ஷவ்வால் 1443 ஹிஜ்ரி கமரி 05 ஹிஜ்ரத் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 05 மே 2022


## அல்லாஹ்வின் கட்டளை

اَلَّذِیْنَ اٰتَیْنٰهُمُ الْكِتٰبَ یَتْلُوْنَهٗ حَقَّ تِلَاوَتِهٖ ؕ اُولٰٓىٕكَ یُؤْمِنُوْنَ بِهٖ ؕ وَمَنْ یَّكْفُرْ بِهٖ فَاُولٰٓىٕكَ هُمُ الْخٰسِرُوْنَ

எவர்களுக்கு நாம் வேதம் வழங்கியுள்ளோமோ அவர்கள், அதனைப் பின்பற்ற வேண்டிய முறைப்படியே பின்பற்றுகின்றனர். அவர்களே அதில் நம்பிக்கை கொள்கின்றனர். அதனை மறுக்கின்றவர்களே நஷ்டவாளிகளாவார். (2:122)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மனிதன் தனது நஃப்ஸின் மீது தானே பரிவு காட்டுபவனாக இருக்கக் கூடாது. மாறாக, தனது நஃப்ஸின் மீது இறைவன் பரிவு காட்டும் வகையில் அவன் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் மனிதன் தனது நஃப்ஸின் மீது காட்டுகின்ற பரிவு என்பது நரகம் ஆகும். இறைவனின் பரிவு என்பது சொர்க்கம் ஆகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இது ஒரு நுட்பமான விஷயம் ஆகும். அதாவது ஒருவருக்கு தனது நஃப்ஸின் சோம்பலின் காரணமாக நோன்பு கடினமாக இருக்கின்றது. எனவே நான் நோயாளி ஆவேன். மேலும் எனது உடல்நிலை எப்படி உள்ளது என்றால், நான் ஒருவேளை சாப்பிடாவிட்டால் இன்ன இன்ன நோய்கள் ஏற்பட்டு விடும். இவ்வாறு ஆகிவிடும். அவ்வாறு ஆகிவிடும் என்று அவர் சிந்திக்கின்றார். எனவே அதுபோன்ற நபர் இறைவனின் அருட்கொடையை தமக்கு கடினமானதாக சுயமே கருதுகின்றார். அப்படிப்பட்டவர் எவ்வாறு இறைவனின் நற்கூலிக்கு தகுதி படைத்தவராக இருக்க கூடும்? ஆயினும் ரமலான் வந்து விட்டது. அது வந்ததும் நான் நோன்பு நோற்பேன் என்று எந்த நபரின் உள்ளம் மகிழ்ச்சியாக உள்ளதோ அப்படிப்பட்ட நபர் நோயின் காரணமாக நோன்பு நோற்கவில்லையென்றாலும் அவர் விண்ணில் நோன்பிலிருந்து இழப்பிற்குரியவராக இருக்க மாட்டார். இந்த உலகில் பொய்யான காரணங்களைக் கூறுகின்ற ஏராளமான மக்கள் உள்ளனர். மேலும் நாம் உலகவாதிகளை ஏமாற்றி விடுகின்றதைப் போன்று இறைவனையும் ஏமாற்றி விடலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர். காரணங்களை தேடுபவர்கள் தம்மிடமிருந்து சுயமாக விவகாரங்களை தேடுகின்றனர். அதில் கடினங்களை சேர்த்துக் கொண்டு அந்த விவகாரங்களை சரியானதாக கருதுகின்றனர். ஆனால் இறைவனின் பார்வையில் அது சரியானதல்ல... மனிதன் தனது நஃப்ஸின் மீது தானே பரிவு காட்டுபவனாக இருக்கக் கூடாது. மாறாக, இறைவன் தனது நஃப்ஸின் மீது பரிவு காட்டும் வகையில் அவன் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் மனிதன் தனது நஃப்ஸின் மீது காட்டுகின்ற பரிவு என்பது நரகம் ஆகும். இறைவனின் பரிவு என்பது சொர்க்கம் ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 266 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**நோன்புகளின் விளைவாக அல்லாஹ் தனது இல்ஹாம்களை அருளுகின்றான்**

நோன்பினால் ஏற்படும் ஆன்மீக வடிவிலான நன்மைகளில் ஒரு நன்மை இதுவாகும். அதாவது அதன் விளைவாக அல்லாஹ்வின் இல்ஹாம் மனிதனின் உள்ளத்தில் இறங்குகின்றது. மனிதனின் ஆன்மீக காட்சியின் பார்வையில் அதிக ஒளி பிறக்கின்றது. உண்மையில் மிக ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இந்த விஷயம் தெரிய வரும். அல்லாஹ்விற்கு எந்த பழக்கமும் இல்லையென்றாலும் அவனிடத்தில் பழக்கத்தின் மூலமாக ஓர் ஒப்புமை நிச்சயம் காணப்படுகின்றது. மனிதனைப் போன்று அவனுக்கு கண்கள் இருப்பதில்லை. இருந்தபோதிலும் அவன் நிச்சயம் பார்க்கின்றான். அவனுக்கு காதுகள் இல்லை. ஆயினும் அவன் நிச்சயம் நன்கு கேட்கின்றான். இதேபோன்று அவனுக்கு எந்த பழக்கமும் கிடையாது. இருந்தபோதிலும் அவன் ஒரு பணி செய்யும்போது பின்னர் அதனை மீண்டும் செய்கின்றான். இந்த விஷயம் அவனிடத்தில் நிச்சயம் காணப்படுகின்றது. மனிதனிடத்திலும் இந்த விஷயம் காணப்படுகின்றது. சில மக்களிடம் கை அல்லது கால்களை அசைக்கும் பழக்கம் உள்ளது. அதனை அவர்கள் மீண்டும் மீண்டும் அசைக்கின்றனர். ஒரு விஷயத்தை மீண்டும் மீண்டும் செய்வதே பழக்கம் என்பதன் பொருளாகும். இந்த விஷயம் அல்லாஹ்விடத்திலும் உள்ளது. அவன் ஒரு குறிப்பான சந்தர்ப்பத்தில் தனது அருளை திறக்கும்போது பின்னர் அந்த சந்தர்ப்பத்தில் மீண்டும் மீண்டும் அருள் புரிகின்றான். அல்லாஹ்வின் இந்த பண்பிற்கேற்ப ரமலான் மாதத்தில் திருக்குர்ஆன் இறங்கியுள்ளது. எனவே எந்த தூதரின் மீது திருக்குர்ஆன் இறங்கியதோ அந்தத்தூதர் பின்பற்றப்பட்டால் அப்போது அல்லாஹ்வின் பழக்கத்துடன் ஒப்புமை கொண்ட பண்புகளின் கீழ் அப்படிப்பட்ட மக்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களை பின்பற்றியவாறு உலகிலிருந்து தனித்து விடுகின்றார்கள். இந்த உலகில் இருந்து கொண்டு அதனுடனான தொடர்புகளை அவர்கள் குறைத்துக் கொள்கின்றனர். உண்பதிலும், பருகுவதிலும், குடிப்பதிலும் குறைவு செய்கின்றனர். வீணான பேச்சுக்களிலிருந்து விலகி இருக்கின்றனர். நோன்புகளின் மூலமாக அல்லாஹ் தனது இல்ஹாம்களை அருளுகின்றான். மேலும் நல்ல கனவுகள் மற்றும் உண்மையான ஆன்மீக காட்சிகளின் கதவுகளை அல்லாஹ் திறந்து கொடுக்கின்றான். மறைவான இரகசியங்களை அறிவித்துக் கொடுக்கின்றான்

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 377 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

**ஸஹ்ர் செய்வதில் பரக்கத் உள்ளது**

1923: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஸஹ்ர் செய்யுங்கள். நிச்சயமாக ஸஹ்ர் செய்வதில் பரக்கத் உள்ளது.

1933: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் மறதியாக உண்ணவோ, பருகவோ செய்தால் அவர் தம் நோன்பை முழுமைப்படுத்தட்டும். ஏனெனில் அவரை அல்லாஹ்வே உண்ணவும், பருகவும் செய்தான்.

**பயணத்தில் நோன்பு நோற்பது நற்செயல் அல்ல**

1946: ஹஸ்ரத் ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பயணத்தில் இருந்தபோது, ஒருவர் நிழலில் தங்க வைக்கப்பட்டு (அவரைச் சுற்றிலும்) மக்கள் குழுமியிருந்ததைக் கண்டார்கள். இது என்ன? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். (இவர்) நோன்பாளி ஆவார் என்று மக்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பயணத்தில் நோன்பு நோற்பது நற்செயலில் சேராது என்று கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி தொகுதி 3, பாடம் நோன்பு – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 01 ஏப்ரல் 2022*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜப்பான் சுற்றுப்பயணம் – 2013 ஆம் ஆண்டு*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அநேகமாக முழு அரபும் மார்க்கப் புறக்கணிப்பை மேற்கொண்டு விட்டது. சில மக்கள் முற்றிலுமாக இஸ்லாத்தை விட்டு விலகி விட்டனர். மேலும் சிலர் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டனர். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்கள் அனைவருக்கும் எதிராக போரிட்டார்கள். வரலாற்று நூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்று புத்தகங்களில் அதுபோன்ற அனைத்து நபர்களை குறித்தும் முர்ததீன் (மார்க்கத்தை விட்டு விலகியவர்கள்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக பிற்காலத்தில் வந்த வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள் மற்றும் அறிஞர்களுக்கு தவறு ஏற்பட்டுள்ளது. அல்லது இஸ்லாத்தில் மார்க்கத்தை புறக்கணிப்பவர்களுக்கு தண்டனை அவர்களை கொலை செய்தலாகும் என்ற தவறான போதனையை பரப்புவதற்கு அவர்கள் காரணமாகி விட்டார்கள்**

**அப்துல்லாஹ் பின் மசூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நாங்கள் எப்படிப்பட்ட ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்தோம் என்றால் அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மூலமாக எங்கள் மீது கருணை செய்யாமல் இருந்திருந்தால் நாங்கள் அழிந்து போய் இருப்போம்**

**திருக்குர்ஆன் வசனங்கள், நபிமொழி, திருக்குர்ஆன் விளக்கவுரைகள், இஸ்லாத்தின் வரலாறு மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்கள் போன்றவற்றின் ஒளியில் இஸ்லாம் முர்தத்களுக்கு மரண தண்டனை விதிக்கவில்லை என்ற கருத்து விரிவாக கூறப்பட்டுள்ளது**

**மதிப்பிற்குரிய முஹம்மது பஷீர் சாஹிப், மதிப்பிற்குரிய ரானா முஹம்மது சாஹிப், மதிப்பிற்குரிய டாக்டர் மஹ்மூத் அஹ்மது காஜா சாஹிப் ஆகிய மர்ஹூம்களின் நற்குறிப்பும், ஜனாஸா காயிப் தொழுகையும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 ஏப்தல் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு ஷஹாதத் மாதம் **01 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த குழப்பங்களைப் பற்றி கூறப்பட்டுக் கொண்டிருந்தது. இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிர்ருல் கிலாஃபா என்ற தமது நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இப்னு கல்தூன் இவ்வாறு எழுதியுள்ளார்: அரபு கோத்திரங்களின் பொது மக்களும், சிறப்பானவர்களும் மார்க்கத்தை புறக்கணித்து சென்றனர். மேலும் பனூ தே மற்றும் பனூ அஸத் கோத்திரங்கள் துலைஹாவின் கைகளில் ஒன்றுகூடின. மேலும் பனூ கத்ஃபான் கோத்திரத்தினர் முர்த்தாகினர். பனூ ஹவாஸன் புறக்கணித்து சென்றனர். அவர்கள் ஸகாத் கொடுப்பதை நிறுத்தி விட்டனர். மேலும் பனூ சுலைம் கோத்திரத்தின் தலைவர் முர்தத் ஆகினார். எல்லா இடங்களிலும் எஞ்சிய மக்களின் நிலைமையும் இவ்வாறே இருந்தது.

இப்னு அஸீர் தனது வரலாற்று நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்: அரபு மக்கள் முர்தத் ஆகினர். ஒவ்வொரு கோத்திரத்தை சார்ந்த பாமர மக்கள் மற்றும் சிறப்பானவர்களிடம் நயவஞ்சகம் வெளிப்பட்டு விட்டது. யூதர்களும், கிறிஸ்தவர்களும் தமது கழுத்துக்களை உயர்த்தி பார்க்கத் தொடங்கினர். தமது நபியின் மரணத்தின் காரணமாகவும், மேலும் எண்ணிக்கையில் குறைவு மற்றும் எதிரிகளின் பெரும்பான்மை போன்றவற்றின் காரணமாகவும் முஸ்லிம்களின் நிலைமை மழை பொழியும் இரவில் நிற்கும் ஆடுகளைப் போன்றதாக ஆகி விட்டது. அதாவது அச்சத்தின் காரணமாக ஓரிடத்தில் ஒன்றுகூடி தமது அடைக்கலத்தை தேடக் கூடியவர்களாக இருந்தனர். அந்த நிலையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று, இந்த மக்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையையே முஸ்லிம்களின் படையாக கருதுகின்றனர். நீங்கள் பார்ப்பதுபோன்று அரேபியர்கள் தங்களுக்கெதிராக கிளர்ச்சி செய்து விட்டனர். எனவே தாங்கள் முஸ்லிம்களின் இந்த ஜமாஅத்தை தங்களிடமிருந்து பிரித்து விடாதீர்கள் என்று மக்கள் கூறினர்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எந்த இறைவனின் கட்டுப்பாட்டில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! காட்டு விலங்குகள் என்னை தூக்கிக் கொண்டு சென்று விடும் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டு விட்டாலும் கூட அப்போதும் நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையை நிச்சயம் அனுப்புவேன். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வழங்கிய தீர்ப்பை ஒருபோதும் என்னால் ரத்து செய்ய முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அப்துல்லாஹ் பின் மசூத் அவர்களின் சான்றின் அடிப்படையில் கூறுகின்றார்கள். அப்துல்லாஹ் பின் மசூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நாங்கள் எப்படிப்பட்ட ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்தோம் என்றால் அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மூலமாக எங்கள் மீது கருணை செய்யாமல் இருந்திருந்தால் நாங்கள் அழிந்து போய் இருப்போம். நாங்கள் பின்தே முகாஸ் அதாவது ஒரு வயது பெண் ஒட்டகம் மற்றும் பின்தே லபூன் அதாவது இரண்டு வயது பெண் ஒட்டகத்தை ஸகாத்தாக வசூல் செய்வதற்காக போரிடுவோம். மேலும் நாம் அரபு கோத்திரங்களை கட்டுக்குள் கொண்டு வருவோம். மேலும் மரணம் எங்களுக்கு வந்து விடாத வரை நாங்கள் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டே செல்வோம் என்ற விஷயத்தின் கீழ் எங்களை அன்னார் (ரலி) அவர்கள் எங்களை ஒன்றுகூட்டினார்கள்.

(சிர்ருல் கிலாஃபா உருது மொழியாக்கம், பக்கம் 188, 189
அடிக்குறிப்பு, நஸாரத் இஷாஅத் சார்பாக அச்சிடப்பட்டது)

எடுத்துரைக்கப்படுகின்ற இந்த விவாதத்தில் சில தவறான புரிதல்களும் உருவாகி இருக்கக் கூடும். இஸ்லாத்தில் முர்தத்திற்கு (மார்க்கத்தை விட்டு விலகியவருக்கு) தண்டனை மரணமா? என்ற கேள்வியும் எழுப்பப்படக் கூடும். இது தொடர்பாக நான் சுருக்கமாக கூறி விடுகின்றேன்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அநேகமாக முழு அரபும் மார்க்கப் புறக்கணிப்பை மேற்கொண்டு விட்டது. சில மக்கள் முற்றிலுமாக இஸ்லாத்தை விட்டு விலகி விட்டனர். மேலும் சிலர் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டனர். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்கள் அனைவருக்கும் எதிராக போரிட்டார்கள். வரலாற்று நூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்று புத்தகங்களில் அதுபோன்ற அனைத்து நபர்களை குறித்தும் முர்ததீன் (மார்க்கத்தை விட்டு விலகியவர்கள்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக பிற்காலத்தில் வந்த வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள் மற்றும் அறிஞர்களுக்கு தவறு ஏற்பட்டுள்ளது. அல்லது இஸ்லாத்தில் மார்க்கத்தை புறக்கணிப்பவர்களுக்கு தண்டனை அவர்களை கொலை செய்தலாகும் என்ற தவறான போதனையை பரப்புவதற்கு அவர்கள் காரணமாகி விட்டார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைத்து முர்தத்களுக்கு எதிராகவும் ஜிஹாதை அறிவித்திருந்தார்கள். மேலும் அதுபோன்ற மக்களில் மீண்டும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டவர்களைத் தவிர மற்ற அனைவரையும் அன்னார் கொன்று விட்டார்கள். மேலும் இவ்வாறு அந்த வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்றை எழுதக் கூடியவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை கத்தே நுபுவ்வத் கொள்கையின் பாதுகாவலராகவும், அதன் கதாநாயகனாகவும் முன்னிறுத்தி உள்ளார்கள்.

ஆனால் உண்மை என்னவென்றால், கிலாஃபத் ராஷிதாவின் அந்த காலகட்டத்தில் கத்மே நுபுவ்வத் கொள்கையின் பாதுகாப்பு பற்றிய எந்த சிந்தனையோ அல்லது பார்வையோ இருந்திருக்கவில்லை. மேலும் கத்மே நுபுவ்வத்திற்கு ஏதோ அபாயம் ஏற்பட்டிருந்ததாலோ அல்லது மார்க்கத்தை

புறக்கணித்தவருக்கு தண்டனை கொலையாக இருந்ததாலோ அல்லது அவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்பதாலோ அந்த மக்களுக்கு எதிராக வாள் ஏந்தப்படவில்லை.

இது பற்றிய விளக்கம் அடுத்து எடுத்துரைக்கப்படும். மேலும் இது தொடர்பாக அவர்களுக்கெதிராக போருக்கான அறிவிப்பு ஏன் செய்யப்பட்டது? என்பதும் எடுத்துரைக்கப்படும். ஆனால் அதற்கு முன்பு திருக்குர்ஆன் அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மார்க்கத்தை புறக்கணிப்பவர்களை கொலை செய்வதை அவர்களுக்குரிய தண்டனையாக கூறியுள்ளார்களா? அல்லது வேறு ஏதேனும் தண்டனையை நிர்ணயித்துள்ளார்களா? என்பதை கூறுவது அவசியமாகும்.

இஸ்லாமிய சொல் வழக்கில் எவர் இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து விலகி விடுவாரோ மேலும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு எவர் இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து வெளியேறி விடுவாரோ அவர் முர்தத் என்று கூறப்படுகின்றார். நாம் திருக்குர்ஆனைப் பார்க்கும்போது நமக்கு தெரிய வருகின்றது. அதாவது அல்லாஹ் பல்வேறு இடங்களில் முர்தத் ஆகக் கூடிய மக்களைப் பற்றி முறையாக குறிப்பிட்டுள்ளான். ஆனால் அவர்களை கொலை செய்யும்படியோ அல்லது வேறு ஏதாவது உலக தண்டனைகளுக்கான குறிப்போ இடம் பெறவில்லை. எனவே உதாரணமாக சில வசனங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. முதல் வசனம் இதுவாகும்.

وَمَنْ يَّرْتَدِدْ مِنْكُمْ عَنْ دِيْنِهٖ فَيَمُتْ وَهُوَ كَافِرٌ
فَاُولٰٓئِكَ حَبِطَتْ اَعْمَالُهُمْ فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ ۚ
وَاُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ

பொருள்: உங்களுள் எவராவது தனது மார்க்கத்தில் இருந்து திரும்பி, நிராகரித்த நிலையிலேயே மரணமடைந்து(ம்) விட்டால் அவர்களின் செயல்கள் இவ்வுலகிலும், மறுமையிலும் வீணாகி விடும். அத்தகையோர் நரகத்திற்குரியவர்களாவர். அவர்கள் அதிலேயே நெருங்காலம் இருப்பர். (2:118)

இந்த வசனத்தில், உங்களில் எவர் முர்தத் ஆகி விடுவாரோ மேலும் இறுதியில் நிராகரிப்பின் நிலையிலேயே மரணித்து விடுவாரோ என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து முர்ததிற்கு தண்டனை மரணம் இல்லை என்பது தெளிவாக தெரிய வருகின்றது. ஏனென்றால் அவருக்கு தண்டனை மரணமாக இருந்திருந்தால் அதுபோன்ற முர்தத் இறுதியில் நிராகரிப்பின் நிலையில் மரணிப்பார் என்று வந்திருக்காது.

மற்றோர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا مَنْ يَّرْتَدَّ مِنْكُمْ عَنْ دِيْنِهٖ فَسَوْفَ
يَاْتِي اللّٰهُ بِقَوْمٍ يُّحِبُّهُمْ وَيُحِبُّوْنَهٗٓ ۙ اَذِلَّةٍ عَلَى الْمُؤْمِنِيْنَ
اَعِزَّةٍ عَلَى الْكٰفِرِيْنَ ۡ يُجَاهِدُوْنَ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَلَا
يَخَافُوْنَ لَوْمَةَ لَآئِمٍ ۚ ذٰلِكَ فَضْلُ اللّٰهِ
يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ۚ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! உங்களில் எவர் தனது மார்க்கத்தை விட்டு முர்தத் ஆகி விடுவார்களோ நிச்சயமாக அப்படிப்பட்ட மக்களுக்கு பகரமாக அல்லாஹ் ஒரு சமுதாயத்தை கொண்டு வருவான். அல்லாஹ் அவர்களை நேசிப்பான். அவர்களும் அல்லாஹ்வை நேசிப்பார்கள். நம்பிக்கையாளர்களிடம் அவர்கள் மிகவும் பணிவுகாட்டக் கூடியவர்களாகவும், நிராகரிப்பாளர்களிடம் அவர்கள் மிகவும் கடினமானவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்வார்கள். குறை கூறுவோரின் பழிப்பிற்கும் அவர்கள் அஞ்ச மாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருளாகும். அவன் எவருக்கு விரும்புகின்றானோ அவருக்கு வழங்குகின்றான். அல்லாஹ் மிகவும் அருளக்கூடியவனும், நன்கு அறிபவனுமாவான். (5:55)

இந்த இடத்திலும் முர்தத் ஆகக் கூடியவர்களைப் பற்றி குறிப்பிட்டு கூறியவாறு நம்பிக்கையாளர்களுக்கு இந்த நற்செய்தி வழங்கப்பட்டுள்ளது. அதாவது அதுபோன்ற மக்களுக்கு பகரமாக அல்லாஹ் சமுதாயத்திற்கு மேல் சமுதாயத்தை வழங்குவான். ஆனால் முர்தத் ஆகக் கூடியவர்களை கொலை செய்து விடுங்கள் என்றோ அல்லது இன்ன இன்ன தண்டனை வழங்குங்கள் என்றோ எங்கும் கூறப்படவில்லை.

அடுத்து மற்றொரு வசனம் உள்ளது. அது எல்லா வகையான சந்தேகங்களையும், ஐயங்களையும், கேள்விகளையும் தீர்க்கக் கூடியதாகும். அது சூரா அந்நிஸாவின் இந்த வசனம் ஆகும். அல்லாஹ் கூறுகின்றான்.

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا
ثُمَّ ازْدَادُوْا كُفْرًا لَّمْ يَكُنِ اللّٰهُ
لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ سَبِيْلًا

பொருள்: நிச்சயமாக நம்பிக்கை கொண்டு பின்னர் அந்த மக்கள் நிராகரித்து விட்டனர். பின்னர் ஈமான் கொண்டு பின்னர் நிராகரித்து விட்டனர். பின்னர் நிராகரிப்பில் முன்னேறிக் கொண்டே சென்று விட்டனர். அல்லாஹ் அவர்களை மன்னிக்கக் கூடியவன் அல்லன். மேலும் அவர்களுக்கு நேர்வழியின் பக்கம் வழிகாட்டவும் மாட்டான். (4:138)

எனவே மிகவும் தெளிவான மறுப்பு அதாவது முர்ததிற்கு (மார்க்கத்தை விட்டு விலகுபவருக்கு) மரண தண்டனை கிடையாது என்பது இந்த வசனத்தில் உள்ளது. இதே விளக்கம்தான் நமது நூல்களிலும் வழங்கப்படுகின்றன. திருக்குர்ஆன் விரிவுரையாளர்களும் இதனை விளக்கியுள்ளனர்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இதனை சற்று விளக்கமாக தமது தர்ஜுமத்துல் குர்ஆனில் இவ்வாறு கூறியுள்ளார்கள்: முர்ததிற்கு தண்டனை மரணம் ஆகும் என்ற கொள்கை இந்த வசனத்தில் மறுக்கப்பட்டுள்ளது. எனவே அல்லாஹ் கூறினான்: ஒருவர் முர்தத் ஆகி விட்டு பின்னர் ஈமான் கொண்டு பின்னர் முர்தத் ஆகி பின்னர் மீண்டும் நம்பிக்கை கொண்டால் அவரது முடிவு அல்லாஹ்விடத்தில் உள்ளது. அவர் நிராகரிப்பின் நிலையில் மரணிப்பார் என்றால் நிச்சயமாக அவர் நரகவாசியாக இருப்பார். ஒருவேளை முர்ததிற்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று இருந்திருந்தால் பின்னர் அவர் மீண்டும் மீண்டும் நம்பிக்கை கொள்வது மற்றும் நிராகரிப்பதற்கான கேள்வியே எழுந்திருக்காது.

(ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் திருக்குர்ஆன் உருது மொழியாக்கம் பக்கம் 158 அடிக்குறிப்பு)

அதுமட்டுமின்றி திருக்குர்ஆனில் மேலும் சில வசனங்கள் உள்ளன. அவை அடிப்படையில் முர்ததை கொலை செய்வதை மறுக்கக் கூடியவை ஆகும். உதாரணமாக அல்லாஹ் கூறுகின்றான்:

وَقُلِ الْحَقُّ مِنْ رَّبِّكُمْ ۟ فَمَنْ شَآءَ فَلْيُؤْمِنْ
وَّمَنْ شَآءَ فَلْيَكْفُرْ ۙ اِنَّآ اَعْتَدْنَا لِلظّٰلِمِيْنَ
نَارًا ۙ اَحَاطَ بِهِمْ سُرَادِقُهَا ۚ وَاِنْ يَّسْتَغِيْثُوْا
يُغَاثُوْا بِمَآءٍ كَالْمُهْلِ يَشْوِي الْوُجُوْهَ ۚ بِئْسَ
الشَّرَابُ ۚ وَسَآءَتْ مُرْتَفَقًا

பொருள்: நீர் கூறுவீராக! இந்த உண்மை உமது இறைவனிடமிருந்து வந்துள்ளதாகும். எனவே விரும்புபவர் அதன் மீது ஈமான் கொள்ளட்டும். எவர் விரும்புகின்றாரோ அவர் நிராகரித்துக் கொள்ளட்டும். நிச்சயமாக அநீதியிழைப்பவர்களுக்கு நாம் எப்படிப்பட்ட நெருப்பை தயார் செய்து வைத்துள்ளோம் என்றால் அதன் சுவர்கள் அவர்களை சூழ்ந்து கொள்ளும். அவர்கள் தண்ணீர் கேட்டால் அவர்களுக்கு தண்ணீர் வழங்கப்பட மாட்டாது. மாறாக, அவர்களின் முகங்களை எரிக்கக் கூடிய, செம்மைப் போன்ற தண்ணீர் வழங்கப்படும். அது மிகவும் தீய பானம் ஆகும். அது மிகவும் கெட்ட தங்குமிடமாகும்.

அடுத்து மார்க்கத்தில் எல்லா வகையான பலவந்தத்தையும் மறுத்தவாறு அல்லாஹ் கூறுகின்றான்:

لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ ۟ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ
الْغَيِّ ۚ فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْ بِاللّٰهِ فَقَدِ
اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى ۟ لَا انْفِصَامَ لَهَا ۚ
وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ

பொருள்: மார்க்கத்தில் எந்த பலவந்தமும் இல்லை. நிச்சயமாக நேர்வழியும், வழிகேடும் தெளிவாக வெளிப்பட்டு விட்டது. எனவே எவர் ஒருவர் ஷய்த்தானை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வாரோ அவர் நிச்சயமாக அறுந்து விடாத உறுதிவாய்ந்த ஒன்றை வலுவாக பற்றிக் கொண்டார். அல்லாஹ் மிகவும் கேட்கக் கூடியவனும், நன்கு அறிபனுமாவான். (2:257)

திருக்குர்ஆனின் சில வசனங்கள் உதாரணமாக எடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மார்க்கத்தின் பெயரால் எவ்வகையிலும் கடுமை காட்டுவதும், பலவந்தம் செய்வதும், தண்டனை வழங்குவதும் மறுக்கப்பட்டுள்ளது. 'முர்தத்' ஆகக் கூடியவர்களைப் பற்றி குறிப்பிட்டு விட்டு பின்னர் எவ்வகையிலும் தண்டனை பற்றியும் குறிப்பிடாமல் இருப்பது நமக்கு இந்த விஷயத்தை தெளிவுபடுத்துகின்றது. அதாவது முர்தத் ஆகக் கூடியவர்களுக்கு இஸ்லாமிய ஷரீஅத் எந்த பௌதீக, உலக தண்டனையையும் நிர்ணயிக்கவில்லை.

இதே திருக்குர்ஆன் போதனை மற்றும் கருத்திற்கு ஆதரவாக இன்னும் சில விஷயங்களும் கிடைக்கின்றன. அதாவது திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் நயவஞ்சகர்களைப் பற்றிய குறிப்பும் உள்ளது. நயவஞ்சகர்களின் தீமைகள் எந்த அளவிற்கு அழுத்தத்துடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றால் நிராகரிப்பாளர்களின் தீமைகள் கூட அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. நயவஞ்சகர்கள் ஃபாஸிக் ஆவார்கள் என்றும், அவர்கள்

நிராகரிப்பாளர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நிராகரிப்பை மேற்கொண்டவர்கள் என்றும் அவர்களைக் குறித்து கூறப்பட்டுள்ளது. ஆனாலும் அதுபோன்ற அந்த நயவஞ்சகருக்கு எந்த தண்டனையை பற்றிய குறிப்பும் கூறப்படவில்லை. மேலும் இஸ்லாமிய வரலாறு சாட்சியாக உள்ளது. அதாவது எந்தவொரு நயவஞ்சகருக்கும் அவரது நயவஞ்சகத்தின் அடிப்படையில் எந்த தண்டனையும் வழங்கப்படவில்லை.

எனவே நயவஞ்சகர்களை குறிப்பிட்டவாறு திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

قُلْ اَنْفِقُوْا طَوْعًا اَوْ كَرْهًا لَّنْ يُّتَقَبَّلَ مِنْكُمْ ؕ اِنَّكُمْ
كُنْتُمْ قَوْمًا فٰسِقِيْنَ ○ وَمَا مَنَعَهُمْ اَنْ تُقْبَلَ
مِنْهُمْ نَفَقٰتُهُمْ اِلَّاۤ اَنَّهُمْ كَفَرُوْا بِاللّٰهِ وَبِرَسُوْلِهٖ
وَلَا يَاْتُوْنَ الصَّلٰوةَ اِلَّا وَهُمْ كُسَالٰى وَلَا
يُنْفِقُوْنَ اِلَّا وَهُمْ كٰرِهُوْنَ

பொருள்: நீர் (அவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் விருப்புடனோ அல்லது வெறுப்புடனோ செலவு செய்தாலும், எவ்வகையிலானாலும் உங்களிடமிருந்து(ள்ள தானம்) ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏனென்றால் நீங்கள் கட்டுப்படாத மக்களாக இருக்கின்றீர்கள். அவர்களுடைய தானங்கள் ஏற்றுக் கொள்ளப்படாததற்கான காரணம், அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் அவர்கள் நிராகரிப்பது, தொழுகையினை மிகுந்த சோம்பலுடன் நிறைவேற்றுவது, இறைவழியில் வெறுப்புடன் அவர்கள் செலவு செய்வது ஆகிய இவற்றைத் தவிர வேறொன்றுமில்லை. (9:53,54)

இந்த வசனத்திலும் நயவஞ்சகர்களை ஃபாஸிக் என கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் மற்றும் அவனது தூதரை நிராகரிக்கக் கூடியவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. பின்னர் அவர்களின் நிராகரிப்பின் கடுமையைப் பற்றி குறிப்பிட்டவாறு இந்த வசனத்தில் மேலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

يَحْلِفُوْنَ بِاللّٰهِ مَا قَالُوْا ؕ وَلَقَدْ قَالُوْا كَلِمَةَ الْكُفْرِ
وَكَفَرُوْا بَعْدَ اِسْلَامِهِمْ وَهَمُّوْا بِمَا لَمْ يَنَالُوْا ۚ
وَمَا نَقَمُوْۤا اِلَّاۤ اَنْ اَغْنٰىهُمُ اللّٰهُ وَرَسُوْلُهٗ مِنْ
فَضْلِهٖ ۚ فَاِنْ يَّتُوْبُوْا يَكُ خَيْرًا لَّهُمْ ۚ
وَاِنْ يَّتَوَلَّوْا يُعَذِّبْهُمُ اللّٰهُ عَذَابًا اَلِيْمًا ۙ فِى الدُّنْيَا
وَالْاٰخِرَةِ ۚ وَمَا لَهُمْ فِى الْاَرْضِ مِنْ وَّلِىٍّ وَّلَا نَصِيْرٍ

பொருள்: தாங்கள் (தீய வார்த்தை) எதனையும் கூறவில்லை என்று அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிடுகின்றனர். ஆனால் அவர்களோ நிராகரிப்பிற்குரிய வார்த்தைகளை கூறியுள்ளனர். மேலும் அவர்கள் இஸ்லாத்தை தழுவியதன் பின்னர் நிராகரித்துள்ளனர். மேலும் தங்களால் பெற முடியாதவற்றை விரும்பினர். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தங்களின் அருளால் முஸ்லிம்களைச் செல்வந்தர்களாக்கினர் என்பதற்காகவே (முஸ்லிம்களாகிய) அவர்களிடம் அவர்கள் வெறுப்பைக் காட்டுகின்றனர். எனவே அவர்கள் கழிவிரக்கங்கொள்வார்களாயின், அது அவர்களுக்கு நன்றாக இருந்திருக்கும். அவர்கள் புறக்கணித்து விட்டுச் சென்று விடுவார்களாயின், அல்லாஹ் அவர்களுக்கு இவ்வுலகிலும், மறு உலகிலும் வேதனையளிக்கக் கூடிய தண்டனை வழங்குவான். இவ்வுலகில் எவரும் அவர்களுக்கு நண்பராகவோ உதவி செய்பவராகவோ இருக்க மாட்டார். (9:74)

இதேபோன்று சூரா தவ்பாவின் 66வது வசனத்தில் நீங்கள் நம்பிக்கை கொண்ட பிறகு நிராகரிப்பாளர்களாக ஆகி விட்டீர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

لَا تَعْتَذِرُوْا قَدْ كَفَرْتُمْ بَعْدَ اِيْمَانِكُمْ

எந்த பொய் காரணமும் கூறாதீர்கள்.

لَا تَعْتَذِرُوْا قَدْ كَفَرْتُمْ بَعْدَ اِيْمَانِكُمْ

எந்த பொய் காரணமும் கூறாதீர்கள். நிச்சயமாக நீங்கள் நம்பிக்கை கொண்ட பிறகு நிராகரிப்பாளராக ஆகி விட்டீர்கள். (9:66)

இதேபோன்று நயவஞ்சகர்களைக் குறித்து சூரா அல்முனாஃபிகீன் என்ற முழு அதிகாரமும் இறங்கியுள்ளது. அதில் அல்லாஹ் கூறுகின்றான்:

اِتَّخَذُوْۤا اَيْمَانَهُمْ جُنَّةً فَصَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ ؕ
اِنَّهُمْ سَآءَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ○
ذٰلِكَ بِاَنَّهُمْ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا فَطُبِعَ
عَلٰى قُلُوْبِهِمْ فَهُمْ لَا يَفْقَهُوْنَ

பொருள்: அவர்கள் தமது சத்தியத்தை கேடயமாக ஆக்கிக் கொண்டு அல்லாஹ்வின் வழியிலிருந்து மக்களை தடுக்கின்றார்கள். நிச்சயமாக அவர்கள் செய்பவை மிகவும் தீயதே ஆகும். இது எதனால் என்றால் அவர்கள் நம்பிக்கை கொண்டு பின்னர் நிராகரித்து விட்டனர். எனவே அவர்களின் உள்ளங்களில் முத்திரையிடப்பட்டு விட்டது. அவர்கள் புரிவதில்லை. (63:3,4)

இங்கும் கூட அந்த மக்கள் நம்பிக்கை கொண்ட பிறகு பின்னர் நிராகரிப்பை மேற்கொண்டது பற்றி குறிப்பு உள்ளது. ஆனால் எந்த வகையான தண்டனையும் நிர்யணிக்கப்படவில்லை. மேலும் எந்த தண்டனையும் வழங்கப்படவில்லை.

சுருக்கமாக, ஏராளமான வசனங்கள் இன்னும் உள்ளன. அவற்றில் நம்பிக்கை கொண்டு விட்டு பின்னர் வெளிப்படையாகவோ அல்லது செயல் ரீதியாகவோ நிராகரிப்பை மேற்கொண்ட மக்களை ஃபாஸிக் என்றும், காஃபிர் என்றும், முர்தத் என்றும் கூறப்பட்டுள்ளது. எனினும் அவர்களுக்கு மரணம் போன்ற எந்த தண்டனையும் நிர்ணயிக்கப்படவில்லை என்பது அதிலிருந்து தெளிவாகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முர்தத்களைப் பற்றி என்ன கூறுகின்றார்கள்? திருக்குர்ஆனுக்குப் பிறகு இனி நாம் அது பற்றியும் பார்ப்போம். எந்த அருளுக்குரிய நபர் மீது திருக்குர்ஆன் இறக்கப்பட்டதோ, எவர் كَانَ خُلُقُهُ الْقُرْآن என்பதை உண்மைப்படுத்தக் கூடிய நபராக இருந்தாரோ மேலும் எவர் தமது செயலால் திருக்குர்ஆனின் கட்டளைகளை செயல்படுத்தியவாறு தமது முன்னுதாரணத்தையும், முன்மாதிரியையும் நிலைநாட்டியுள்ளாரோ அந்த அருளுக்குரிய நபர் முர்தத் தொடர்பாக என்ன கூறினார்கள்? என்று பார்ப்போம்.

சஹீஹ் புகாரியில் கீழ்க்கண்ட சம்பவம் இந்த விஷயத்திற்கு தீர்ப்பு வழங்கி விடுகின்றது. அதாவது ஒரு முர்தத் மார்க்கத்தை புறக்கணித்த குற்றத்திற்காக மட்டும் அவருக்கெதிராக எந்த ஷரீஅத் கட்டளையும் நிர்ணயிக்கப்படவில்லை. அந்த ஹதீஸின் சொற்கள் இவையாகும்.

அதாவது ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு காட்டரபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டவாறு அன்னார் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தார். அடுத்த நாள் அந்த காட்டரபிக்கு மதீனாவில் காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து என்னுடைய பைஅத்தை எனக்கு திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார். பின்னர் அவர் மீண்டும் வந்தார். எனது பைஅத்தை எனக்கு திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார். அன்னார் (ஸல்) அவர்கள் மூன்று முறை அதனை நிராகரித்தார்கள். அவருக்கு பதிலளிக்கவில்லை. பின்னர் அந்த காட்டரபி மதீனாவிலிருந்து சென்று விட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மதீனா ஒரு நெருப்பு உலையைப் போன்றதாகும். அது அழுக்கை வெளியேற்றி விடுகின்றது. உண்மையான, தூய பொருளை சுத்தப்படுத்தி விடுகின்றது.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் மதீனா, ஹதீஸ் எண் 1883)

ஹஸ்ரத் மவ்லானா ஷேர் அலி சாஹிப் (ரலி) அவர்கள் தமது நூலான ''முர்த்ததின் கொலையும், இஸ்லாமும்'' என்ற நூலில் இந்த ஹதீஸை பதிவு செய்துள்ளார்கள். (இது அன்னாரின் ஒரு நூல் ஆகும். இந்த நூலானது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மேற்பார்வையில் தயார் செய்யப்பட்டது). பிறகு அன்னார் எழுதுகின்றார்கள்:

அந்த காட்டரபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மீண்டும் மீண்டும் வருவதிலிருந்து முர்ததிற்கு மரண தண்டனை எதுவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. அவ்வாறில்லையென்றால் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்திருக்க மாட்டார். மாறாக, தகவலின்றி மதீனாவிலிருந்து மறைந்து வெளியேறுவதற்கு முயற்சி செய்திருப்பார். மேலும் தான் மார்க்கத்தின் புறக்கணிப்பை மேற்கொள்ள விரும்புகின்ற விஷயத்தை எவரிடமும் வெளிப்படுத்தி இருக்க மாட்டார்.

அன்னார் தொடர்ந்து எழுதுகின்றார்கள்: மார்க்க புறக்கணிப்பை தடுப்பதற்காக இஸ்லாமிய ஷரீஅத்தில் முர்ததிற்கு மரண தண்டனை நிர்ணியிக்கப்பட்டிருப்பதாக நம்மிடம் கூறப்படுகின்றது. அதாவது மக்கள் இஸ்லாத்தில் நிலைத்திருப்பதற்கு பலவந்தப்படுத்துவது அதன் நோக்கமாகும். இந்த விஷயம் உண்மையென்றால், பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மீண்டும் மீண்டும் தம்மிடம் வந்த நபரை அன்னார் (ஸல்) ஏன் எச்சரிக்கவில்லை? நினைவிற் கொள்ளும். இஸ்லாத்தில் மார்க்க புறக்கணிப்பிற்கு தண்டனை மரணம் ஆகும் என்று ஏன் அவரிடம் கூறவில்லை? நீர் மார்க்க புறக்கணிப்பை மேற்கொண்டால் நீர் கொலை செய்யப்படுவீர் என்றும் ஏன் கூறவில்லை? மற்றொரு பக்கம் அவரோ மீண்டும் மீண்டும் மார்க்க புறக்கணிப்பை வெளிப்படுத்தி வந்தார். மேலும் அவர் முர்தத் ஆகி சென்று விடுவார் என்ற அச்சமும் இருந்தது. அதுபோன்ற நிலையில்

அவரை சுற்றி காவலாளி ஏன் நியமிக்கப்படவில்லை? அவ்வாறு செய்திருந்தால் அவர் முர்ததாகி செல்லும்போது அவரை அவர்கள் பிடித்திருப்பார்கள். மேலும் அவர் மீது ஷரீஅத்தின் கட்டளையும் நிறைவேற்றப்பட்டிருக்கும்.

மேலும் அன்பரே! நீர் உயிர் பிழைக்க விரும்புகின்றீர் என்றால் மார்க்க புறக்கணிப்பின் பெயரை எடுக்காதீர். ஏனென்றால் எவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டு பின்னர் மார்க்கப் புறக்கணிப்பை மேற்கொண்டு விடுகின்றாரோ அவர் உடனடியாக கொலை செய்யப்பட்டு விடுவார் என்ற சட்டம் இந்த நகரத்தில் உள்ளது என்று சஹாபிகள் அவரிடம் ஏன் கூறவில்லை? எனவே அந்த காட்டரபி மீண்டும் மீண்டும் மார்க்க புறக்கணிப்பை வெளிப்படுத்துவதும், மேலும் அவர் மீண்டும் மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்ததும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மார்க்க புறக்கணிப்பின் விளைவைப் பற்றி அவரை எச்சரிக்காமல் இருந்ததும், அவர் கொலை செய்யப்படுவார் என்ற கட்டளையை சஹாபிகள் கூறாமல் இருந்ததும், இறுதியில் யாருக்கும் தெரியாமல் அவர் மதீனாவிலிருந்து வெளியேறி விடுவதும் ஆகிய இவை அனைத்தும் இஸ்லாத்தில் முர்ததிற்கு எதிராக ஷரீஅத்தில் எந்த தண்டனையும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதற்கு தெளிவான சாட்சியங்களாகும்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் வெளியேறியபோது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதும், மேலும் மதீனா (நெருப்பு) உலையைப் போன்றதாகும். அது அழுக்குகளையும், அசுத்தங்களையும் தூய்மையான பொருளிலிருந்து பிரித்து விடுகின்றது என்று கூறியதும் இந்த விஷயத்தை தெளிவுபடுத்துகின்றது. அதாவது ஒருவரை பலவந்தமாக இஸ்லாத்தில் நிலைநிறுத்தி வைப்பது, பலவந்தமான முறையை மேற்கொண்டு மக்களை மார்க்க புறக்கணிப்பிலிருந்து தடுத்து நிறுத்துவது போன்ற விதிகளுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரானவர்களாக இருந்தார்கள். இன்னும் கூறப்போனால், தூய்மையற்ற மனிதன் முஸ்லிம்களின் கூட்டத்திலிருந்து பிரிந்து விட்டால் அன்னார் (ஸல்) அவர்கள் அதனால் மகிழ்ச்சியடையாமல் இருக்கவில்லை. மேலும் ஒருவரை அவரது விருப்பத்திற்கு எதிராக பலவந்தமாக இஸ்லாத்தில் நிலைநிறுத்துவதற்கு அன்னார் (ஸல்) அவர்கள் முயற்சி செய்ததும் இல்லை. இன்னும் கூறப்போனால், அதுபோன்ற நபர்கள் சென்று விடுவது அன்னாரின் பார்வையில் குறைபாடான பொருள் தூய பகுதியிலிருந்து விலகியதற்கு ஒப்பானதாக இருந்தது.

எவர் ஒரு முறை இஸ்லாத்தில் நுழைந்து விடுவாரோ அவரை எல்லா சாத்தியமான வழிமுறைகளாலும் இஸ்லாத்தில் நிலைநிறுத்துவதற்கு பலவந்தப்படுத்துவதும், அவர் அப்படியும் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் அவரது உதாரணத்திலிருந்து மற்றவர்கள் படிப்பினை பெற வேண்டும் என்பதற்காக அவரை கொலை செய்து விடுவதும் அன்னார் (ஸல) அவர்களின் விதிமுறையாக இருந்திருந்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த காட்டரபி சென்றபோது பதற்றமடைந்து நீங்கள் ஏன் அவரை செல்ல விட்டீர்கள்? என்று சஹாபிகளை கண்டித்திருப்பார்கள். மேலும் அவரை பிடித்து ஏன் கொலை மிரட்டல் விடுக்கவில்லை? என்று கூறியிருப்பார்கள். மேலும் ஓடிச் சென்று அந்த தீயவர் எங்கிருந்தாலும் அவரை பிடித்துக் கொண்டு வாருங்கள். அப்போது தான் அவருக்கு மரண தண்டனை வழங்க முடியும் என்று அன்னார் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு கட்டளை வழங்கி இருப்பார்கள். ஆனால் அன்னார் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. மாறாக, வேறொரு வார்த்தைகளில் இவ்வாறு கூறினார்கள்:

அதாவது நல்லது நடந்துள்ளது. அவர் சென்று விட்டார். அவர் முஸ்லிம்களுக்கு மத்தியில் இருப்பதற்கு தகுதியானவர் இல்லை. இறைவன் சுயமே அவரை தமது கரத்தால் நம்மிடமிருந்து விலக்கி விட்டான். சுருக்கமாக, முர்தத்களுக்கு எந்த மார்க்க சட்டத்தின் அடிப்படையிலும் தண்டனை நிர்ணயிக்கப்படவில்லை என்பதற்கு அந்த காட்டரபியின் உதாரணம் ஓர் உறுதியான, நிச்சயமான சான்றாகும். மேலும் மார்க்கத்தை புறக்கணித்த ஒவ்வொருவரையும் அவரது புறக்கணிப்பின் காரணமாக மட்டுமே அவரை கொலை செய்வது ஒருபோதும் முஸ்லிம்களிடத்தில் வழிமுறையாக இருந்ததில்லை.

(மவ்லானா ஷேர் அலி சாஹிப் அவர்கள் எழுதிய கத்லே முர்தத் அவ்ர் இஸ்லாம் என்ற நூல், பக்கம் 109 – 111 – 1925 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

முர்தத்களுக்கு எந்த ஷரீஅத் தண்டனையும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதற்கு இரண்டாவது ஆதாரம் இதுவாகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபியா என்ற இடத்தில் மக்கத்து இணை வைப்பவர்களுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகள் ஆகும். ஹுதைபியா உடன்படிக்கை தொடர்பாக ஹதீஸில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

பரா பின் ஆஸிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபியா உடன்படிக்கை நாளன்று இணை வைப்பவர்களுடன் மூன்று விஷயங்களில் உடன்படிக்கை செய்தார்கள். முதலாவது நிபந்தனை என்னவென்றால், இணை வைப்பவர்களிலிருந்து ஒரு நபர் முஸ்லிமாகி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து விட்டால் அவரை இணை வைப்பவர்களின் பக்கம் திருப்பி அனுப்பி விட வேண்டும். இரண்டாவது நிபந்தனை என்னவென்றால், முஸ்லிம்களிலிருந்து ஒருவர் முர்தத் ஆகி இணை வைப்பவர்களிடம் வந்து விட்டால் பின்னர் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இணை வைப்பவர்கள் திருப்பி அனுப்ப மாட்டார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுஸ் சுலஹ், ஹதீஸ் எண் 2700)

இந்த உடன்படிக்கையின் இரண்டாவது நிபந்தனையிலிருந்து இந்த விஷயம் தெளிவாக வெளிப்படுகின்றது. அதாவது முர்தத்களுக்கு எதிராக ஷரீஅத்தில் எந்த தண்டனையும் நிர்ணயிக்கப்படவில்லை. ஏனென்றால் ஒருவேளை மார்க்க புறக்கணிப்பிற்கு இஸ்லாமிய ஷரீஅத்தில் ஒருவரை கொலை செய்ய வேண்டும் என்ற தண்டனை நிர்ணயிக்கப்பட்டிருந்தால் பின்னர் ஷரீஅத்தின் தண்டனையின் விவகாரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இணை வைப்பவர்களின் கூற்றுகளை ஒருபோதும் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள்.

அதுமட்டுமின்றி இன்னும் ஏராளமான சம்பவங்கள் உள்ளன. அதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் சில மக்கள் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு புறக்கணித்து விட்டனர். ஆயினும் வெறும் புறக்கணிப்பின் காரணமாக அவர்களுக்கு எந்த தண்டனையும் வழங்கப்படவில்லை என்பதும், ஆயினும் அவர்கள் போர் மற்றும் கிளர்ச்சி போன்ற தீய குற்றங்களில் ஈடுபட்டனர் என்பதும் தெரிய வருகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் மற்றொரு வசனத்திலிருந்தும் இந்த விவகாரத்தை இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

அதாவது وَمَا عَلَى الرَّسُولِ إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ என்று அல்லாஹ் கூறியிருந்தான். வாளுக்கு பகரமாக பிரச்சாரத்தை பயன்படுத்துவதே ஒரு சிறந்த வழிமுறையாகும் என்பது இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் இதே வழிமுறையைத் தான் மேற்கொண்டிருந்தார்கள். மேலும் அன்னாரின் காலத்தில் மக்களுக்கும் அல்லாஹ்வின் புறமிருந்து இதே வழிகாட்டல் தான் கிடைத்திருந்தது. அதாவது எமது தூதரின் பணி தூதுச் செய்தியை எட்ட வைப்பது மட்டுமே ஆகும். வாளால் பலவந்தமாக ஏற்றுக் கொள்ளச் செய்வதல்ல. சான்றுகளால் ஒரு விஷயத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதே மார்க்கவாதிகளின் பணியாகும் என்பது முழு திருக்குர்ஆனின் சாராம்சம் ஆகும். பலவந்தத்தால் ஒப்புக் கொள்ளச் செய்வது மார்க்கவாதிகளின் பணி அல்ல. ஆனால் வேதனை என்னவென்றால், இதுவரை உலகம் இந்த விவகாரத்தை புரியவில்லை. இன்னும் கூறுப்போனால் முஸ்லிம்கள் சுயமே முர்தத்களை கொலை செய்வதை ஆகுமானதாக கருதுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருவரின் கொள்கை பொய்யானதோ அல்லது உண்மையோ அந்தக் கொள்கையைக் அவர் எல்லா நிலையிலும் உண்மையானதாகவே கருதுகின்றார். அதாவது ஒரு முஸ்லிம் தனது மார்க்கத்தை உண்மையானதாக கருதுவதைப்போன்றே அவரும் கருதுகின்றார். கிறிஸ்தவம் பொய்யானதுதான். ஆனால் கேள்வி என்னவென்றால், உலகின் பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தை எப்படி கருதுகின்றார்கள்? அவர்கள் நிச்சயம் அதனை உண்மையானதாக கருதுகின்றனர். யூத மார்க்கம் நிச்சயமாக தற்போது உண்மையான மார்க்கம் அல்ல. ஆனால் கேள்வி என்னவென்றால், யூதர்களின் பெரும்பான்மை பகுதியினர் யூதத்துவத்தை எவ்வாறு கருதுகின்றனர்? நிச்சயமாக அவர்கள் அதனை உண்மையானதாக கருதுகின்றனர்.

எனவே தனது மார்க்கம் உண்மையாகும். மற்றவர்களின் மார்க்கம் உண்மையானதல்ல என்று ஒருவர் கருதுவதாலேயே அவரை கொலை செய்வது ஆகுமானதல்ல. அது ஆகுமானதென்றால், பின்னர் ஒரு கிறிஸ்தவர் விரும்பினால் எந்த முஸ்லிமையும் கொலை செய்வதற்கு அவருக்கு ஏன் உரிமை இருக்காது?

அதேபோன்று ஓர் இந்து பலவந்தமாக மற்றவரை இந்துவாக ஆக்குவதற்கும் அல்லது பிறரை கொன்று விடுவதற்கும் அவருக்கு ஏன் உரிமை இல்லை? சீனாவில் கான்ஃபிஸியஸ் மார்க்கத்தை பின்பற்றுபவர்களுக்கு ஏன் அந்த உரிமை இருக்காது? அதாவது அவர்கள் பலவந்தமாக மற்றவர்களை தமது மார்க்கத்தில் ஏன் இணைத்துக் கொள்ளக் கூடாது? பிலிப்பைன்ஸில் தற்போதும் கூட 15,000 அல்லது 20,000 முஸ்லிம்கள் உள்ளனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய அந்த நேரத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதுவாக இருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை கூடுதலாகும். கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களை பலவந்தமாக கிறிஸ்தவர்களாக ஆக்கிக் கொள்வதற்கு ஏன் கிறிஸ்தவர்களுக்கு உரிமை இருக்காது? மேலும் அமெரிக்கா பலவந்தமாக தமது நாட்டில் வசிக்கக் கூடிய முஸ்லிம்களை முஸ்லிமாக்கிக் கொள்வதற்கு அமெரிக்காவிற்கு ஏன் உரிமை இல்லை? பலவந்தமாக அனைவரையும் கிறிஸ்தவர்களாக்கிக் கொள்வதற்கோ அல்லது அனைவரையும் கம்யூனிஸ்ட்களாக ஆக்கிக் கொள்வதற்கும் ஏன் ரஷ்யாவிற்கு உரிமை இருக்காது?

முஸ்லிம்கள் மற்றவர்களை பலவந்தமாக தனது கொள்கையின் கீழ் கொண்டு வர முடியும் என்றால் பின்னர் அதே உரிமை மதத்தின் அடிப்படையில் மற்றவர்களுக்கும் இருக்கின்றது. ஆனால் இந்த உரிமையை வழங்கி விட்டால் உலகில் எப்போதாவது அமைதி நிலைபெற முடியுமா?

இந்த உரிமையை நிலைநிறுத்தி விட்டு நீங்கள் உங்களது மகன்களிடமோ அல்லது உங்களின் மனைவியிடமோ இந்த விவகாரம் சரி என்று கூற முடியுமா? அதாவது முஸ்லிம்களை பலவந்தமாக கிறிஸ்தவர்களாக்கிக் கொள்வதற்கு கிறிஸ்தவர்களுக்கு உரிமை உள்ளது என்று கூற முடியுமா? முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களை பலந்தமாக முஸ்லிமாக்கிக் கொள்வதற்கு முஸ்லிமிற்கு உரிமை உள்ளது என்று கூற முடியுமா? அனைத்து ஹனஃபிகளையும் பலவந்தமாக ஷியாக்களாக ஆக்கிக் கொள்வதற்கு ஈரானிய வாசிகளுக்கு உரிமை உள்ளதா? ஹனஃபிகள் அனைவரையும் பலவந்தமாக சன்னிகளாக ஆக்கிக் கொள்வதற்கு ஹனஃபிகளுக்கு உரிமை உள்ளதா? சுருக்கமாக இது அறிவுக்கு எதிரான எப்படிப்பட்ட விஷயம் என்றால் எந்த மனிதரும் இதனை ஒரு நிமிடத்திற்கு கூட ஒப்புக் கொள்ள முடியாது.

முந்தைய நபிமார்களின் சமுதாயங்கள் இறைவனின் வழிகாட்டலை ஏற்றுக் கொள்வதிலிருந்து நிராகரித்தபோதெல்லாம் இறைவன் அவர்களை நோக்கி இவ்வாறே கூறியுள்ளான்:

اَنُلۡزِمُكُمُوۡهَا وَاَنۡتُمۡ لَهَا كٰرِهُوۡنَ

அதாவது நீங்கள் சுயமே நேர்வழியை பெறுவதை விரும்பவில்லையென்றால் பின்னர் நான் பலவந்தமாக உங்களுக்கு நேர்வழியை வழங்க முடியாது.

ஆனால் வேதனை என்னவென்றால், தற்போதைய காலத்தில் முஸ்லிம்களின் இந்த அசல் தத்துவத்தை நிராகரிக்கக் கூடிய மக்களும் உள்ளனர். தற்போது நாம் பார்க்கின்றோம். முஸ்லிம்களின் பெரும்பான்மை இதனையே கூறுகின்றது. உலகம் இந்த விவகாரத்தை புரிந்து கொண்டால் பின்னர் நிச்சயமாக மார்க்கம் மற்றும் அரசியல் விவகாரங்களில் அநீதியும், அநியாயமும் முடிந்து விடும். தமது கொள்கையை மற்றவர்கள் மீது பலவந்தமாக எவரும் திணிக்கவும் மாட்டார். மேலும் தமது அரசியல் அமைப்பை மற்ற நாடுகளின் மீது பலவந்தமாக நிலைநாட்டுவதற்கும் எவரும் முயற்சி செய்ய மாட்டார்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 606, 607)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாம் வாளின் அழுத்தத்தால் பரவியது என்பதை நமது எதிரிகள் எங்கிருந்து, யாரிடமிருந்து கேட்டார்கள்? என்பது எனக்குத் தெரியாது. இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

لَاۤ اِكۡرَاهَ فِى الدِّيۡنِ

பொருள்: இஸ்லாமிய மார்க்கத்தில் பலவந்தம் இல்லை. அவ்வாறிருக்க பின்னர் பலவந்தம் செய்வதற்கு யார் கட்டளை வழங்கினார்? பலவந்தத்திற்கு இஸ்லாத்தில் என்ன ஏற்பாடுகள்? உள்ளன. எவர்கள் பலவந்தமாக முஸ்லிம்களாக ஆக்கப்படுகின்றார்களோ அவர்களின் உண்மையும், ஈமானும் இவ்வாறு இருக்க முடியுமா? அதாவது எந்த சம்பளமுமின்றி 200, 300 நபர்களாக இருந்தபோதிலும் பல்லாயிரம் நபர்களை எதிர்த்து அவர்கள் போரிட்டிருக்க முடியுமா? அவர்கள் ஆயிரம் எண்ணிக்கையை அடைந்த விட்டபோது பல லட்சம் எதிரிகளை தோற்கடித்திருக்க முடியுமா? மார்க்கத்தை எதிரிகளின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்காக ஆடுகளைப் போன்று தங்களது தலைகளை வெட்டச் செய்திருப்பார்களா? இஸ்லாத்தின் உண்மைக்கு தமது இரத்தத்தால் முத்திரை பதித்திருப்பார்களா? இறைவனின் ஏகத்துவத்தை பரப்புவதற்காக இப்படிப்பட்ட நேசர்களாக இருந்திருப்பார்களா? அதாவது ஏழ்மையான நிலையில் கடினத்தை மேற்கொண்டு ஆஃப்ரிக்காவின் பாலைவனம் வரை சென்றடைந்திருப்பார்களா? மேலும் அந்த நாட்டில் இஸ்லாத்தை பரப்பி இருப்பார்களா? பின்னர் எல்லா வகையான கடினங்களையும் சகித்துக் கொண்டு சீனாவை சென்றடைந்தார்கள். போர் செய்து அல்ல. மாறாக, மிகவும் எளிமையான முறையில் அந்த நாட்டை சென்றடைந்து இஸ்லாத்திற்கு அழைப்பு கொடுத்தார்கள்.

அதன் விளைவு என்னவாயிற்று என்றால், அவர்களின் அருளுக்குரிய அறிவுரையால் பல கோடி முஸ்லிம்கள் அந்த பூமியில் உருவாகினர். அடுத்து மிக எளிமையான மக்களாக இந்தியாவிற்கு வந்தார்கள். ஏராளமான ஆரிய சமுதாயத்தின் மக்களை இஸ்லாத்திற்கு கொண்டு வந்தார்கள். ஐராப்பாவின் எல்லை வரை لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ என்ற சப்தம் சென்றடைந்தது. நீங்கள் உண்மையாக கூறுங்கள். பலவந்தமாக முஸ்லிமாக்கப்பட்ட நபர்கள் இந்த பணியை செய்ய முடியுமா? எவர்கள் உள்ளத்தால் நிராகரிப்பாளராகவும், நாவினால் நம்பிக்கையாளராகவும் இருப்பார்களோ அவர்களால் இந்த பணியை செய்ய முடியுமா? ஒருபோதும் முடியாது. மாறாக, எவர்களின் உள்ளம் ஈமானிய ஒளியால் நிறைந்திருக்குமோ, எவர்களின் உள்ளங்களில் இறைவன் மட்டுமே இருப்பானோ அப்படிப்பட்ட மக்களே இந்த பணியை செய்யக் கூடும்.

(பைகாமே சுலஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 468, 469)

இந்த திருக்குர்ஆன் வசனங்கள் மற்றும் வழிகாட்டல்களின் ஒளியில் முர்ததிற்கு மரண தண்டனை கிடையாது என்பது நிரூபணமாகி விட்டது. தற்போது எழுகின்ற கேள்வி என்னவென்றால், முர்தத்களுக்கு மரண தண்டனை கிடையாது என்றால் பின்னர் ஏன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களை கொலை செய்தார்கள்? மேலும் கொலை செய்யும்படி கட்டளையிட்டார்கள். உண்மை என்னவென்றால், வரலாற்றை படிப்பதிலிருந்து மிக எளிதாக நமக்கு இந்த விஷயம் தெரிய வருகின்றது.

அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் முர்தத் ஆனவர்கள் வெறும் மார்க்கத்தை மட்டும் புறக்கணிக்கவில்லை. மாறாக, அவர்கள் கிளர்ச்சியாளர்களாக இருந்தனர். மேலும் ரத்தம் சிந்த வைக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்ட கிளர்ச்சியாளர்களாக அவர்கள் இருந்தனர். அவர்கள் மதீனாவின் அரசாங்கத்தின் மீது தாக்குதல் நடத்தி முஸ்லிம்களை கொலை செய்வதற்கான மிக பயங்கரமான திட்டம் மட்டும் தீட்டவில்லை. மாறாக, பல்வேறு பகுதிகளில் முஸ்லிம்களை சிறை பிடித்து மிகவும் கருணையற்ற முறையில் கொலை செய்தனர். முஸ்லிம்களின் உடல் உறுப்புகளை வெட்டி அவர்களை கொன்று விட்டனர். முஸ்லிம்கள் உயிருடன் நெருப்பில் எரிக்கப்பட்டனர். அநீதி, கொலை, கொள்ளை, கிளர்ச்சி போன்ற கொடூரமான குற்றங்களை செய்யக் கூடியவர்களாக முர்ததான அந்த மக்கள் இருந்தனர். அதன் காரணமாக தற்காப்பு மற்றும் தண்டனை வழங்கும் நடவடிக்கை என்ற ரீதியில் அந்த குற்றவாளிகளுக்கெதிராக போர் செய்யப்பட்டது.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

جَزَآءُ سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثْلُهَا என்பதற்கேற்ப அவர்களுக்கும் அதேபோன்று தண்டனைகள் வழங்கி கொலை செய்வதற்கான கட்டளைகள் வழங்கப்பட்டன.

எனவே வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களிலிருந்து சில விளக்கங்கள் முன் வைக்கப்படுகின்றன. தாரீகே கமீஸ் என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அதாவது கார்ஜா பின் ஹிஸ்ன் என்பவன் முர்தத்களை சார்ந்தவனாக இருந்தான். தனது சமுதாயத்தின் சில மக்களை அழைத்துக் கொண்டு மதீனாவை நோக்கி முன்னேறினான். மதீனாவாசிகள் போருக்காக புறப்படுவதற்கு முன்பாகவே அவர்களை தடுத்து நிறுத்தி விட வேண்டும். அல்லது அவர்கள் கவனமற்றவர்களாக இருக்கும்போது அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விட வேண்டும் என்று அவன் விரும்பி இருந்தான். எனவே அவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் அன்னாருடன் இருந்த முஸ்லிம்களிடம் அவர்கள் அறியாத நிலையில் இருக்கும்போது தாக்குதல் தொடுத்தான்.

(தாரீகுல் கமீஸ் தொகுதி 3 பக்கம் 173 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முர்தத்கள் மதீனாவின் மீது மட்டும் தாக்குதல் தொடுக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களை தோற்கடித்தபோது அந்த முர்தத்கள் உண்மையான ஈமான் கொண்ட முஸ்லிம்களையும் அதாவது தங்களது சமுதாயத்தில் வசித்து வந்த உண்மையான முஸ்லிம்களையும் கொன்று விட்டனர். கடந்த குத்பாவில் இது பற்றி ஏற்கனவே நான் கூறியிருக்கின்றேன். தனது சமுதாயம் முர்ததான பிறகும் கூட அந்த சமுதாயத்தைச் சார்ந்த சிலர் இஸ்லாத்தில் நிலை நின்றிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களை முர்தத்கள் கொலை செய்தனர்.

மேலும் அல்லாமா தபரி இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பல்வேறு தாக்குதல்கள் நடத்தி அந்த கோத்திரங்களை தோற்கடித்தார்கள். அப்போது பனூ துப்யான் மற்றும் அபஸ் கோத்திரங்கள் தங்களிடத்தில் வசித்து வந்த முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். மேலும் அவர்களை எல்லா வழிமுறையிலும் கொலை செய்து விட்டார்கள். அதன் பிறகு ஏனைய சமுதாயங்களும் அதேபோன்றே செய்தனர். அதாவது அவர்களும் இஸ்லாத்தில் நிலைநின்றவர்களை கொலை செய்து விட்டனர்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 256 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு அஸீர் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

பனூ துப்யான் கோத்திரங்கள் தங்களிடம் வசித்து வந்த அப்பாவி முஸ்லிம்களை மிக மோசமாக கொலை செய்யத் தொடங்கி விட்டனர். அவர்களை பார்த்து ஏனைய கோத்திரங்களும் அவ்வாறே செய்தனர். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எல்லா கோத்திரத்தைச் சார்ந்த மக்களையும் அதாவது எவர்கள் முஸ்லிம்களை கொலை செய்தார்களோ அவர்களை நான் கொலை செய்வேன் என்று சத்தியம் செய்தார்கள்.

(அல்பதாயா வன்நஹாயா லி இப்னீ கஸீர் தொகுதி 2 பக்கம் 256 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது மார்க்க புறக்கணிப்பை மேற்கொண்ட கோத்திரங்கள் மார்க்க கருத்து வேறுபாடு என்ற அளவில் மட்டும் மார்க்கத்தை புறக்கணிக்கவில்லை. மாறாக, அவர்கள் இஸ்லாமிய அரசாங்கத்திற்கெதிராக கிளர்ச்சி செய்தனர். தமது கைகளில் வாள் ஏந்தினர். மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தனர். தத்தமது சமுதாயத்தின் முஸ்லிம்களை கொலை செய்தனர். நெருப்பில் போட்டனர். அவர்களின் உடல்களை சிதைத்தனர்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு தபரி வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அதாவது அஸத், கத்ஃபான், ஹவாஸன், சுலைம், தை ஆகிய கோத்திரங்கள் தோல்வியுற்றபோது காலித் (ரலி) அவர்கள் அவர்களின் மன்னிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது எவர்கள் முர்ததான நிலையில் முஸ்லிம்களை நெருப்பில் போட்டு எரித்தார்களோ மேலும் உடல்களை சிதைத்து முஸ்லிம்கள் மீது அநீதியிழைத்தார்களோ அவர்களைத் தவிர மற்றவர்களை மன்னித்தார்கள்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 265 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு கல்தூம் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

அரேபிய தீப கற்பத்தின் முர்ததான அந்த கோத்திரங்கள் மதீனாவை இலக்காக வைத்தவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் முஸ்லிம்களுடன் போர் புரிவதற்காக புறப்பட்டன.

(தாரீக் இப்னு குல்தூம் தொகுதி 2 பக்கம் 436 – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தபரி வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

முதன் முதலில் அபஸ் மற்றும் துபியான் கோத்திரம் தாக்குதல் நடத்தியது. எனவே ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் திரும்பி வருவதற்கு முன்னதாகவே அந்த கோத்திரங்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு போர் செய்ய நேரிட்டது.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 254 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு கல்தூம் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ரபீஆ கோத்திரம் மார்க்க புறக்கணிப்பை மேற்கொண்டது. அவர்கள் முன்ஸிர் பின் நுஃமானை நிலைநிறுத்தியது. அவன் மக்ரூர் (ஆணவம் மிக்கவன்) என்று பெயர் வாங்கியிருந்தான். அவர்கள் அவனை அரசனாக்கிக் கொண்டார்கள்.

(தாரீக் இப்னு குல்தூம் தொகுதி 2 பக்கம் 439, 440 – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியின் விரிவுரையாளரான அல்லாமா அய்னி இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்தவர்களுடன் இதன் காரணமாக மட்டுமே போர் புரிந்தார்கள். ஏனென்றால் அவர்கள் வாள் மூலமாக ஸகாத்தை தடுத்து நிறுத்திக் கொண்டார்கள். மேலும் முஸ்லிம் சமுதாயத்திற்கெதிராக போர் புரிந்தார்கள்.

(அம்தத்துல் காரி தொகுதி 24 பக்கம் 122 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இமாம் கத்தாபி அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மார்க்க புறக்கணிப்பை மேற்கொண்ட மற்றும் ஸகாத் போன்றவற்றை செலுத்த மறுத்தவர்களைப் பற்றி பல்வேறு விஷயங்களை எழுதிய பிறகு இதனை எழுதியுள்ளார்கள்: அதாவது அந்த மக்கள் உண்மையிலேயே கிளர்ச்சியாளர்களாக இருந்தனர். மேலும் அந்த மக்கள் மார்க்கத்தை புறக்கணித்த கூட்டத்தினருடன் இணைந்து கொண்டதால் அவர்கள் முர்தத்கள் என்று அழைக்கப்பட்டனர்.

(நைலுல் அவ்தார், கிதாபுஸ் ஸகாத், பக்கம் 724 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

ஒரு நூலாசிரியர் மீண்டும் மீண்டும் தமது நூலில் மார்க்க புறக்கணிப்பை மேற்கொண்டவர்களை குறித்து கிளர்ச்சி மற்றும் கிளர்ச்சியாளர்கள் போன்ற வார்த்தைகளை எழுதியுள்ளார். எனவே அவர் இவ்வாறு கூறுகின்றார்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணச் செய்தி முழு அரேபியாவிலும் பரவியபோது எல்லா புறமும் கிளர்ச்சி எனும் நெருப்பின் ஜுவாலை கொழுந்து விட்டெறிந்தது. அந்த நெருப்பின் ஜுவாலையில் மிக அதிகமாக யமன் பகுதி இருந்தது. அந்த நெருப்பை மூட்டக் கூடிய நபர் அன்ஸி கொலை செய்யப்பட்டிருந்தபோதிலும் நெருப்பு பரவியது. பனூ ஹனீஃபா கோத்திரத்தில் முஸைலமாவும், பனூ அஸத் கோத்திரத்தின் துலைஹாவும் நபித்துவ வாதம் செய்து ஆயிரக்கணக்கான மக்களை தம்முடன் இணைத்துக் கொண்டனர். மேலும் அஸத் மற்றும் கத்ஃபாவின் நட்புக் கோத்திரத்தின் நபி குரைஷிய நபியை விட நமக்கு மிகவும் பிரியமானவர். ஏனென்றால் முஹம்மது (ஸல்) மரணித்து விட்டார்கள். ஆனால் துலைஹா உயிருடன் இருக்கின்றான் என்று மக்கள் கூறத் தொடங்கி விட்டனர்.

இந்த கிளர்ச்சியின் செய்தி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது, அந்த பகுதியின் ஆட்சியாளர்கள் மற்றும்

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. **(14:36)**

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

அதிகாரிகளிடமிருந்து அனைத்து சம்பவங்களின் முழுமையான அறிக்கை கிடைக்கும் வரை நாம் காத்திருக்க வேண்டும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதிக நாட்கள் கழிந்திருக்கவில்லை. ஆட்சியாளர்களிடமிருந்து அறிக்கைகள் வந்தடைந்தன. அந்த அறிக்கைகளிலிருந்து கிளர்ச்சியாளர்களின் கரங்களிலிருந்து அரசாங்கம் மட்டும் ஆபத்தில் இல்லை. மாறாக, மார்க்க புறக்கணிப்பிற்கு உடன்படாமல் இஸ்லாத்தில் நிலைநிற்கின்ற மக்களின் உயிர்களும் அபாயத்தில் உள்ளது தெளிவாக வெளிப்பட்டது. அந்த நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு முழுமையான வலிமையுடன் கிளர்ச்சிகளை எதிர்கொள்வது, கிளர்ச்சியாளர்களை எல்லா நிலையிலும் கட்டுப்படுத்துவது, நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது போன்றவற்றை தவிர வேறு எந்த வழியும் இருக்கவில்லை.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) என்ற நூல் பக்கம் 131 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஒரு நூலாசிரியர் எழுதுகின்றார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பார்வையில் அரபின் பல்வேறு பகுதிகளில் கிளர்ச்சியின் நெருப்பை மூட்டிக் கொண்டிருந்த அந்த முர்தத்களை கட்டுப்படுத்தவது அவசியமாக இருந்தது. ஏனென்றால் அந்த முர்தத்களின் கைகளால் இஸ்லாமிய விளக்கிற்கும், இஸ்லாமிய மக்களுக்கும் கடுமையான அபாயம் சூழ்ந்திருந்தது.

(அபுன் நஸீர் அவர்கள் எழுதிய செய்யதுனா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) என்ற நூல் பக்கம் 603)

அடுத்து ஒரு நூலாசிரியர் எழுதுகின்றார். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஏராளமான அரபு கோத்திரங்களின் தலைவர்கள் முர்தத் ஆகி விட்டனர். ஒவ்வொரு கோத்திரமும் தத்தமது பகுதியில் சுய அதிகாரம் கொண்டதாக ஆகி விட்டது. ஆராய்ச்சியாளர்களைப் பொருத்தவரை இந்த புறக்கணிப்பு என்பது பெரும்பாலும் அரசியல் காரணங்களை கொண்டிருந்தது. மார்க்க புறக்கணிப்பு என்பது மிகக் குறைவாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த உலகியல் வாழ்க்கையின் இந்த இறுதி நாட்களில் அரபு நாட்டின் சில கோத்திரத்தின் தலைவர்கள் தமது கிளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் திட்டங்களுக்கு மார்க்க நிறத்தை பூசுவதற்காக நபித்துவ வாதமும் செய்தனர்.

(ஹகீம் முஹ்மூத் ஸஃபர் அவர்கள் எழுதிய குலஃபாயே ராஷிதீன் என்ற நூல் பக்கம் 58)

எவ்வாறிருப்பினும் இந்த தொடர் இன்னும் நீண்டுக் கொண்டு செல்கிறது. இன்ஷா அல்லாஹ் இதன் எஞ்சிய பகுதி எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

இந்த வரலாற்று சான்றுகளின் சுருக்கம் என்னவென்றால், முர்ததான கோத்திரங்கள் ஸகாத் செல்வங்களை தடுத்து நிறுத்திக் கொண்டன. அதாவது அரசாங்க வரியை பலவந்தமாக தடுத்து நிறுத்தின. சில இடங்களில் ஸகாத் செல்வங்களை கொள்ளையடித்தன. படைகளை தயார் செய்தன. தலைநகரம் மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தன. மார்க்க புறக்கணிப்பை செய்வதற்கு மறுத்த முஸ்லிம்களை அவர்கள் கொலை செய்தனர். சிலரை அவர்கள் உயிருடன் நெருப்பில் எரித்து விட்டனர். எனவே அதுபோன்ற அரசாங்கத்தை நிராகரித்த, ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அரசாங்கத்தின் செல்வங்களை கொள்ளையடித்தவர்களுக்கு எதிராக மற்றும் முஸ்லிம்களை கொலை செய்து மற்றும் அவர்களை எரித்தது போன்ற குற்றங்களின் அடிப்படையில் அந்த முர்தத்கள் தண்டனைக்கு உரியவர்களாக ஆகி விட்டனர்.

இதைப் பற்றி அல்லாஹ்வும் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

جَزَاءُ سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثْلُهَا

குற்றவாளி எந்த அளவிற்கு குற்றம் செய்வாரோ அதே அளவிற்கு அவருக்கு தண்டனை வழங்குங்கள்.

மற்றோர் இடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

إِنَّمَا جَزَاءُ الَّذِينَ يُحَارِبُونَ اللَّهَ وَرَسُولَهُ
وَيَسْعَوْنَ فِي الْأَرْضِ فَسَادًا أَنْ يُقَتَّلُوا
أَوْ يُصَلَّبُوا أَوْ تُقَطَّعَ أَيْدِيهِمْ وَأَرْجُلُهُمْ مِنْ خِلَافٍ أَوْ
يُنْفَوْا مِنَ الْأَرْضِ

பொருள்: எவர்கள் அல்லாஹ் மற்றும் தூதருடன் போர் புரிகின்றனரோ அதாவது எவர்கள் தூதர் மற்றும் தூதரின் கலீஃபாவுடனோ அல்லது இஸ்லாமிய அரசாங்கத்துடனோ போர் புரிவார்களோ என்பது பொருளாகும். ஏனென்றால் அல்லாஹ்வுடன் போர் புரிய முடியாது. அல்லாஹ்வை எவராலும் அடிக்க முடியாது. அதேபோன்று கல் அல்லது அம்புகளை எறிய முடியாது. எனவே அவர்களுடன் போர் புரிவதன் பொருள் இதுவே ஆகும்.

அல்லாஹ் மற்றும் தூதருடன் போர் புரிவதன் பொருள் என்ன? என்பது பற்றி وَيَسْعَوْنَ فِي الْأَرْضِ فَسَادًا என்பதில் கூறப்பட்டு விட்டது. இதன் விளக்கம் இதுவாகும். அதாவது எந்த மக்கள் அல்லாஹ் மற்றும் தூதருடன் போர் புரிகின்றார்களோ அதாவது நாட்டில் குழப்பம் செய்கின்றார்களோ என்பது அதன் விளக்கம் ஆகும். கொலை, கொள்ளை, வழிப்பறி, ஆயுதமேந்தி கிளர்ச்சி செய்தல் போன்றவையும் அதில் அடங்கும். அவர்களுக்குரிய தண்டனை என்னவென்றால், يُقَتَّلُوا أَوْ يُصَلَّبُوا என்பதாகும். அதாவது அவர்களை கடுமையாக கொலை செய்ய வேண்டும் அல்லது சிலுவையில் அறைந்து விட வேண்டும்.

எவ்வாறிருப்பினும் நான் கூறியதுபோன்று சிறிதளவு நான் தற்போது எடுத்துரைத்து விட்டேன். எஞ்சியவற்றை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை செய்ய விரும்புகின்றேன். அவர்களின் ஜனாஸா தொழுகையையும் தொழுகைக்குப் பிறகு தொழ வைப்பேன்.

முதலாவது நற்குறிப்பு ஜமாஅத்தின் ஒய்வு பெற்ற முரப்பியான மதிப்பிற்குரிய முஹம்மது பஷீர் ஷாத் சாஹிப் அவர்களுடையதாகும். இன்றைய நாட்களில் அன்னார் அமெரிக்காவில் இருந்தார்கள். தற்போது 91 வது வயதில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் தந்தையாருக்கு 1926 ஆம் ஆண்டில் பைஅத் செய்வதற்கு நற்பேறு கிடைத்திருந்தது. 1945 ஆம் ஆண்டில் அன்னார் மிடில் வகுப்பில் தேர்ச்சி பெற்ற பிறகு அஹ்மதிய்யா மதரஸாவில் நுழைந்தார்கள். 1952 ஆம் ஆண்டில் அரபி ஃபாஸில் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றார்கள். 1954ல் ரப்வாவின் ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனிலிருந்து ஷாஹித் பட்டம் பெற்றார்கள். பின்னர் ஓராண்டு காலம் மருத்துவ கல்வி பயின்றார்கள். 1956 முதல் 1957 வரை அன்னாருக்கு வகாலத் தஃப்ஸீர் ரப்வாவில் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது.

1958ல் அன்னார் சிராலியோன் சென்று விட்டார்கள். அங்கு முபல்லிக் ஆக அனுப்பப்பட்டார்கள். அங்கு அன்னாருக்கு பல்வேறு இடங்களில் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. அங்கு சிராலியோனில் அன்னாரது காலத்தில் தான் அச்சகம் தொடங்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து நைஜீரியாவில் அன்னாரின் பணி மாற்றம் நடந்தது. அங்கும் அன்னார் மிக நல்ல பணி செய்தார்கள். பின்னர் 3 ஆண்டுகளுக்குப் பிறகு 1964 ஆம் ஆண்டில் நைஜீரியாவிலிருந்து திரும்ப அழைக்கப்பட்டார்கள். பின்னர் 1964 ஆம் ஆண்டு மீண்டும் நைஜீரியாவிற்கு அனுப்பப்பட்டார்கள்.

1967ல் மர்ஹூம் பெனின் நாட்டில் தப்லீக் சுற்றுப்பயணம் செய்தார்கள். அங்கு உள்ளூர் மக்களுக்கு தப்லீக் செய்து அவர்களிடம் பைஅத் பெறுவதற்கு அல்லாஹ் அன்னாருக்கு நற்பேறு வழங்கி இருந்தான். 1970 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் ஆஃப்ரிக்க சுற்றுப்பயணத்தில் அதாவது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் முதல் முறையாக வருகை தந்தபோது ஹுஸூர் அவர்களின் சமூகத்தில் அன்னார் 100 புதிய அஹ்மதிகளின் பரிசை (பைஅத்தை) வழங்கினார்கள். அப்போது ஹுஸூர் அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியை வெளிப்படுத்தினார்கள். துஆ செய்தார்கள்.

1970 ஆம் ஆண்டில் அன்னார் திரும்பிச் சென்ற போது அன்னாருக்கு உம்ரா செய்வதற்கு நற்பேறு கிடைத்தது. 1983ல் மர்ஹூம் ரப்வாவின் மஜ்லிஸ் கார்பர்தாஸ் பெஹஷ்தி மக்பரா செயலராக பணியமர்த்தப்பட்டார்கள். 1984ல் ஜமாஅத்திற்கெதிரான சட்டம் செயல்படுத்தப்பட்டது. அதன் பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்கு ஹிஜ்ரத் செய்ய நேரிட்டபோது ஹிஜ்ரத்திற்கு முன்பாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் முன்னிலையில் அன்னாருக்கு குத்பா கொடுப்பதற்கு நற்பேறு கிடைத்தது. இந்த அடிப்படையில் வரலாற்றில் அன்னாரது பெயர் இடம் பெற்றுள்ளது.

1988 ஆம் ஆண்டில் மர்ஹூம் தனிப்பட்ட சூழ்நிலையின் காரணமாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம் ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பத்தை வழங்கினார்கள். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் அமெரிக்கா சென்று விட்டார்கள். அன்னார் விட்டுச் சென்றவர்களில் அன்னாரின் மனைவியான மதிப்பிற்குரிய நஸ்ரின் அக்தர் ஷாத் சாஹிப் அவர்களும், ஒரு மகனும், நான்கு மகள்களும் அடங்குவர். அல்லாஹ் மர்ஹூமுடன்

பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களின் சந்ததிகளையும் முழுமையான நன்றியுணர்வுடன் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக வைப்பானாக.

அடுத்த நற்குறிப்பு சியால்கோட் மாவட்டம் மல்யா நவாலா ஊரைச் சார்ந்த ரானா இல்முத்தீன் சாஹிப் அவர்களின் மகனான ரானா முஹம்மது சித்தீக் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னாரும் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மர்ஹூமின் தந்தை 1938 ஆம் ஆண்டில் காதியான் சென்று பைஅத் செய்திருந்தார்கள். மர்ஹூம் நோன்பு மற்றும் தொழுகையை பேணக் கூடியவராக இருந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், துஆ செய்யக் கூடியவராகவும் இருந்தார்கள். மேலும் மிகவும் வீர, தீரமிக்க மனிதராக இருந்தார்கள். கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் கட்டளையின்படி செயல்படக் கூடியவராக இருந்தார்கள். தமது அனைத்து பிள்ளைகளும் ஜமாஅத்துடன் எப்போதும் தொடர்புடையவர்களாக இருப்பதற்கும், கிலாஃபத்தின் மீது அன்பு கொள்வதற்கும், கீழ்ப்படிவதற்கும் அவர்களுக்கு அறிவுறுத்தி வந்தார்கள்.

1974 மற்றும் 1984 ஆம் ஆண்டில் ஜமாஅத்தின் எதிர்ப்பின் காரணமாக அன்னார் மீது கடுமையான சூழ்நிலைகள் வந்தன. ஆனால் அன்னார் மிகவும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார்கள். அன்னார் விட்டுச் சென்றவர்களில் 6 மகன்களும், 1 மகளும் அடங்குவர். அன்னாரின் ஒரு மகனான ரானா முஹம்மத் அக்ரம் மஹ்மூத் சாஹிப் நைஜீரியாவில் ஜமாஅத்தின் முபல்லிக் ஆக உள்ளார்கள். செயல் களத்தில் இருப்பதன் காரணமாக தமது தந்தையின் ஜனாஸாவிலும், நல்லடக்கத்திலும் கலந்து கொள்ள முடியவில்லை. இதற்கு முன்பு 2018 ஆம் ஆண்டில் அன்னாரின் தாயாரும் மரணமடைந்திருந்தார்கள். அன்னாரால் அதிலும் கலந்து கொள்ள முடியாமல் போனது.

அல்லாஹ் அன்னாருக்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மேலும் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் அல்லாஹ் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு இஸ்லாமாபாதைச் சார்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் மஹ்மூத் அஹ்மது காஜா சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

அன்னாரின் வயது 78 ஆக இருந்தது. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் தந்தை காஜா முஹம்மது ஷரீஃப் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் ஒரு கனவின் அடிப்படையில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா (ரலி) அவர்களின் காலத்தில் பைஅத் செய்திருந்தார்கள். மிகவும் தூய இயல்பு படைத்த மனிதராக இருந்தார்கள். எனவே தான் ஏனைய குடும்பத்தினர் ஜமாஅத்திற்கு எதிரியாக இருந்தபோதிலும் அல்லாஹ் அன்னாருக்கு கனவில் 3 முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்யும்படி கட்டளை வழங்கினான். இறுதியில் அன்னார் பைஅத் செய்து விட்டார்கள்.

டாக்டர் மஹ்மூத் காஜா சாஹிப் பெஷாவரிலிருந்து ஆரம்பக் கல்வி பெற்றார்கள். அதன் பிறகு பெஷாவர் பல்கலைக்கழகத்திலிருந்து 1966 ஆம் ஆண்டில் கெமிஸ்ட்ரியில் MSC பட்டம் பெற்றார்கள். பின்னர் 1973 ஆம் ஆண்டு La Trobe University டுரோபே அல்லது டுரோப் பல்கலைக்கழகத்தில் ஆஸ்திரேலியாவின் மெல்பர்னில் Phd பட்டம் பெற்றார்கள். பாகிஸ்தானிலும், வெளிநாடுகளின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கற்பித்து வந்தார்கள். கானாவில் Cape Coast Universityல் அன்னார் பாடம் நடத்தி வந்தபோது அங்கு அன்னாருக்கு என்னுடன் அறிமுகம் ஏற்பட்டது.

நான் பார்த்தேன். மர்ஹூம் மிகவும் எளிய இயல்புடையவராகவும், பணிவான மற்றும் தன்னலமற்ற மனிதராகவும் இருந்தார்கள். மிகச் சிறந்த ஆராய்ச்சி அறிஞராக இருந்தார்கள். பாகிஸ்தானிலும், வெளிநாடுகளிலும் ஆராய்ச்சி அறிஞர் என்ற முறையில் அன்னாருக்கு மிகுந்த மரியாதை செய்யப்படுகின்றது. சவுத்ரி இக்ராமுல்லாஹ் சாஹிப் அவர்களின் மகளான அமத்துல் கய்யூம் சாஹிபா அவர்களுடன் அன்னாரின் திருமணம் நடந்தது. அன்னாருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

டாக்டர் மஹ்மூத் காஜா சாஹிப் அவர்கள் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் 1979 லிருந்து 1984 வரை சிராலியோனில் தனது துணைவியாருடன் வக்ஃப் செய்வதற்கும் நற்பேறு பெற்றார்கள். அன்னாரின் மகன் டாக்டர் தாரிக் காஜா சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்: ரமலானில் குறிப்பாக திருக்குர்ஆனை மொழியாக்கத்துடன் மிகவும் ஆராய்ந்து, சீர்தூக்கிப் படிப்பதில் மூழ்கியிருந்தார்கள். மேலும் இறைவன், அவனது தூதர் மற்றும் கலீஃபாவின் வழிகாட்டல்களை அப்படியே முன் வைக்க வேண்டும் என்ற விஷயத்தில் அதிக அழுத்தம் கொடுத்து வந்தார்கள். சொற்களில் சிறிய தவறு செய்வதாலும் தவறான பொருள் கொடுத்து விட முடியும் என்று கூறி வந்தார்கள்.

இஸ்லாமாபாதின் மாவட்ட அமீர் அப்துல் பாரி சாஹிப் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

எனக்கும், காஜா சாஹிப் அவர்களுக்கும் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் சிராலியோனில் ஒன்றாக தொண்டாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. பாகிஸ்தான் திரும்பியபோது முதலில் அன்னார் அரசாங்கத் துறைகளில் பணிகளை மேற்கொண்டார்கள். பின்னர் இஸ்லாமாபாதிற்கு இடம் பெயர்ந்தார்கள். அங்கு SDPI என்ற ஒரு துறையில் சேர்ந்தார்கள். அன்னார் இந்த துறையில் மிகவும் பிரபலம் அடைந்தார்கள். மிகப் பிரபல்யமானவராக இருந்தபோதிலும் அன்னார் மிகவும் கலப்பற்ற முறையில் பணி செய்தார்கள். உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய அலங்கார பொருட்கள் (அழகு சாதன பொருட்கள்) போன்றவற்றில் உள்ள அபாயரமான கெமிக்கலை ஒழிப்பதற்காக பணி செய்தார்கள். இந்தப் பணியில் உலகளாவிய அளவில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளார்கள். இது தொடர்பாக பல புத்தகங்களை எழுதியுள்ளார்கள். எப்போது ஒரு புத்தகம் எழுதினாலும் அந்தப் புத்தகத்தின் ஒரு நகலை தமக்கு அனுப்பி வைத்து வந்தார்கள். பாரி சாஹிப் கூறுகின்றார்கள்: என்னிடத்தில் தற்போது அன்னாரின் நிறைய புத்தகங்கள் உள்ளன என்றும் அன்னார் கூறுகின்றார்கள்.

மிகவும் தூய்மையான அஹ்மதியாக இருந்தார்கள். கிலாஃபத்துடன் அன்புமிக்க தொடர்பு இருந்தது. எப்போதும் காதிம்களின் தர்பிய்யத்திற்காக அவர்களின் பலவீனங்களை அடையாளப்படுத்தி வந்தார்கள். காஜா முஹம்மத் சாஹிப் அவர்களைப் பற்றி பாகிஸ்தானிலிருந்து மட்டுமின்றி, ஜெர்மனி, சுவீடன், பொர்கினோஸோ, அமெரிக்கா, ஆஸர்பைஜான் சுவிட்சர்லாந்து, நைஜீரியா, எகிப்து, பஹ்ரைன் போன்ற ஏராளமான நாடுகளின் அறிவியல் அறிஞர்களும், அரசாங்க அமைச்சங்களின் பிரதிநிதிகளும், பல்கலைக்கழங்களின் சான்ஸிலர்களும், பேராசிரியர்களும், சமூகத்தின் தன்னார்வ அமைப்புகளின் தலைவர்களும் இரங்கல் செய்தியை அனுப்பியுள்ளார்கள். அவர்களின் ஏராளமான இரங்கல் செய்திகள் வந்துள்ளன. அவர்களின் பிள்ளைகள் அதனை எனக்கும் அனுப்பியுள்ளனர். உதாரணமாக, ஒன்றிரண்டு செய்தியை படித்து விடுகின்றேன்.

World Allianance for Mercury - Free Dentistry என்ற அமைப்பின் தலைவர் Mr. Charles G Brown வாஷிங்டன் DC அமெரிக்கா இவ்வாறு எழுதியுள்ளார்கள்: டாக்டர் மஹ்மூத் காஜா அவர்கள் மிகவும் தனித்தன்மை வாய்ந்த அறிஞரும், மிகச் சிறந்த சமூக ஆர்வலருமாக இருந்தார்கள். புதிய அறிவியல் மற்றும் நச்சுப் பொருட்களைப் பற்றிய அன்னாரின் மிகச் சிறந்த கட்டுரைகள் முன்னேற்றத்தை வழங்கக் கூடியதாகவும், அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் பணிகளுக்கான அடித்தளத்தை அமைப்பதிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். உலகளாவிய அமைப்புகளின் மூலமாக பணி செய்யக் கூடிய அன்னாரின் முயற்சிகள் சமுதாயங்களுக்கு மத்தியில் உடன்படிக்கைகளை செயல் வடிவம் கொடுப்பதற்கும், Civil Soceity க்கு மத்தியில் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும், பாகிஸ்தானில் நச்சுப் பொருட்களை குறைப்பதற்கும் உதவி செய்துள்ளன. 2019 ஆம் ஆண்டில் அன்னாருக்கு BBC ன் The Pacific Basin Consortium of Environment and Health Chairman என்ற விருதும் கிடைத்துள்ளது. டாக்டர் மஹ்மூத் சாஹிப் அவர்களின் சிறப்பான பணிகளில் உலகளாவிய மருத்துவ அமைப்பின் தலைவராக இருந்ததும் ஒரு முக்கிய அம்சமாகும். இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களில் அன்னார் மட்டுமே ஃபிஸிஷன் அல்லாத ஒரே மருத்துவர் ஆவார்கள். இன்னும் கூறப்போனால் Phd மருத்துவராக இருந்தார்கள்.

அதேபோன்று ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தைச் சார்ந்த மருத்துவர்களும் இன்னும் ஏராளமான அறிவியல் அறிஞர்களும் அன்னாரை பாராட்டியுள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் உறவினர்களுக்கு பொறுமையை வழங்குவானாக. அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

## ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜப்பான் சுற்றுப் பயணம் – 2013

### 10 நவம்பர் 2013 (ஞாயிற்றுக்கிழமை)

### பத்திரிகையார் சந்திப்பு

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

☆ ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ஏக இறைவனை வணங்குங்கள். ஒருவர் மற்றவருடைய உரிமைகளை வழங்குங்கள். கணவன் மனைவிக்குரிய உரிமைகளை நிறைவேற்ற வேண்டும். மனைவி கணவனுக்குரிய உரிமையையும் நிறைவேற்ற வேண்டும். மேலும் பிள்ளைகளுக்குரிய உரிமையை நிறைவேற்ற வேண்டும். நிதி விவகாரங்களிலும், கொடுக்கல் வாங்கலிலும் ஒருவர் மற்றவருடைய உரிமைகளை வழங்குங்கள். நீதி மற்றும் நேர்மையில் நிலைத்திருங்கள். ஒரு சமுதாயத்தின் மீதான பகைமை உங்களை நீதியிலிருந்து விலக்கி வைக்காத அளவில் நீதியை நிலைநாட்டுங்கள். உண்மையான கூற்றுகளை கூறுங்கள். உண்மையில் நிலைநில்லுங்கள். ஒருவேளை உங்களுக்கு எதிராகவோ, உங்களது அன்பர்களுக்கு எதிராகவோ சாட்சி செல்ல நேரிட்டாலும் சாட்சி செல்லும் அளவில் உண்மையில் நிலை நில்லுங்கள் என்று இஸ்லாம் கூறுகின்றது.

எனவே அசல் விஷயம் என்னவென்றால், இறைவனுக்குரிய உரிமையை வழங்க வேண்டும். அவனது அடியார்களுக்குரிய உரிமையையும் வழங்க வேண்டும். எனவே இந்த வட்டத்திற்குள் இருந்து கொண்டு சமூகம் மற்றும் ஒவ்வொரு சமுதாயத்தின் மரபுகள், இறைவனின் ஏகத்துவத்தின் மீதும், அந்த இறைவனால் வழங்கப்பட்ட போதனையின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லையென்றால் பின்னர் அந்த மரபுகளை பின்பற்றுவதில் எந்தத் தவறும் இல்லை.

☆ ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ஜப்பானிய சமுதாயத்தின் சில ஒழுக்கங்கள் மிக உயர்ந்தவையாக உள்ளன. மேலும் இஸ்லாத்திற்கு ஏற்புடையதாக உள்ளன. தப்லீக் செய்து கொண்டிருக்கின்ற மற்றும் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற முஸ்லிம்கள் இந்த நல்லொழுக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எல்லா நல்ல விஷயங்களையும் மேற்கொள்ளுங்கள். எல்லா நல்ல விஷயங்களும் உங்களின் தொலைந்துபோன சொத்தாகும். அதைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

☆ ஒரு நிருபரின் கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இது தொடர்பாக நான் முன்னரே கூறி விட்டேன். அதாவது அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ سَوَآءٍۢ بَيْنَنَا وَبَيْنَكُمْ

நம் அனைவருக்கும் மத்தியில் ஒருமித்த அந்த கூற்றில் நாம் ஒன்றுபட வேண்டும். அது என்னவென்றால், நாம் ஏக இறைவனை வணங்குவதாகும். நாம் அனைவரும் இறைவனின் படைப்பினம் ஆவோம். படைப்பினமாக இருப்பதன் காரணத்தால் நாம் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும். ஒருவர் மற்றவரை மதிக்க வேண்டும். நாம் அனைவரும் ஒரே இறைவனை ஒப்புக் கொள்ளக் கூடியவர்கள் ஆவோம்.

☆ உங்களுக்காக விரும்புபவற்றை பிறருக்காகவும் விரும்புங்கள் என்று பைபிள் கூறுகின்றது. இதிலிருந்து பரஸ்பர தொடர்புகளுக்கு ஒரு சிறந்த விதிமுறை கிடைத்து விடுகின்றது என்று ஒரு நிருபர் கேள்வி கேட்டார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உங்களுக்காக விரும்புபவற்றையே பிறருக்ககாவும் விரும்புங்கள் என்று இஸ்லாத்திலும் இதே விதிமுறை உள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களின் துன்பத்தை உணர்வதைப் போன்று பிறரின் துன்பத்தையும் உணருங்கள். அப்போதுதான் நீங்கள் பிறருக்குரிய உரிமைகளை வழங்கக் கூடியவர்களாகவும், இஸ்லாமிய போதனைகளின்படி செயல்படக் கூடியவர்களாகவும் திகழ முடியும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தின் இதே விதிமுறையின் கீழ் நாங்கள் பிரச்சாரப் பணியை செய்கின்றோம். எங்களுக்கு இறை நெருக்கம் கிடைத்து விட வேண்டும் என்பதற்காகவும், நாங்கள் இறைவனின் படைப்பினத்திற்குரிய உரிமையை வழங்க வேண்டும் என்பதற்காகவும் நாங்கள் இஸ்லாமிய போதனைகளின்படி செயல்படுகின்றோம். எனவே இதே போதனைகளையும், தூதுச் செய்தியையும் நாங்கள் மற்றவர்களுக்காகவும் விரும்புகின்றோம். மேலும் அதனை மற்றவர்களுக்கு எட்ட வைக்கின்றோம்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எல்லாரிடத்திலும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற எங்களது முழக்கமும், இதே விஷயங்கள் மற்றும் போதனைகளின் சாராம்சம் ஆகும்.

☆ ஒரு நிருபர் கேட்டார்: நான் மார்க்கம் மற்றும் அறிவியலுக்கு இடையிலுள்ள தொடர்பைப் பற்றி அறிய விரும்புகின்றேன். மேலும் பெண்களின் திறமைகளை அதிகம் பரப்புவது தொடர்பாக தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

பாகிஸ்தானிலிருந்து ஒரு சிறுமி 3 வயதில் ஹிஜ்ரத் செய்து அமெரிக்காவிற்கு வந்துள்ளார். அதன் பின்னர் அந்த சிறுமி அமெரிக்காவில் Phd முடித்துள்ளார். ஒரு நிறுவனத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். ஒரு பாதுகாப்பு பொறுப்பில் இருந்துள்ளார். பாகிஸ்தானில் பெண்களிடம் மிக அதிகமான திறமை இருக்கின்றது என்பது எனது எண்ணமாகும் என்று அந்த நிருபர் கூறினார்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இதற்கு பதிலளித்தவாறு கூறினார்கள்: திருக்குர்ஆன் ஒரு முழுமையான வேதம் ஆகும். நமது அண்டம், பூமியின் அமைப்பு மற்றும் மனித பிறப்பிற்கான செயலில் தொடங்கி பிக்பேங் மற்றும் Black Hole மற்றும் அண்டங்கள் தொடர்பான ஏனைய அனைத்து விஷயங்களைப் பற்றிய குறிப்பும், வழிகாட்டலும் திருக்குர்ஆனில் உள்ளது.

ஹுஸூர் அன்வர் கூறினார்கள்: பாகிஸ்தானின் மிகச் சிறந்த அறிவியல் அறிஞர் நோபல் பரிசு பெற்றவர் டாக்டர் அப்துல் ஸலாம் சாஹிப் ஆவார்கள். அன்னார் தமது ஆய்விலும் ஆராய்ச்சியிலும் திருக்குர்ஆனிலிருந்து உதவி பெற்று வந்தார்கள். திருக்குர்ஆனில் அறிவியலின் பக்கம் வழிகாட்டக் கூடிய 700 வசனங்கள் இருப்பதாக அன்னார் கூறி வந்தார்கள். எங்களைப் பொருத்தவரை அறிவியல் மற்றும் மார்க்கத்தில் எந்த முரண்பாடும் இல்லை.

பெண்கள் கல்வி பயில்வது மற்றும் அவர்களின் திறமைகளிலிருந்து பயன்பெறுவதைப் பொருத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: அதாவது கல்வி பயில்வது ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணின் மீது கடமை ஆகும்.

அன்னார் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு கூறியுள்ளார்கள் என்றால், எவருக்கு மூன்று மகள்கள் இருந்து அவர் அவர்களுக்கு சிறந்த தர்பிய்யத் வழங்கினால் பின்னர் அல்லாஹ் அவருக்கு சொர்க்கத்தை வழங்கி விடுவான்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: சுவிட்சர்லாந்தில் Underground ல் Big Bang தத்துவத்தின் அடிப்படையில் பணி நடைபெறுகின்றது. அந்த அறிவியல் அறிஞர்களின் குழுவில் ஓர் அஹ்மதி பெண்ணும் இடம் பெற்றுள்ளார். அல்லாஹ்வின் அருளால் கல்வி கற்பதிலும் எங்களது அஹ்மதி ஆண்களும், பெண்களும் முன்னணியில் உள்ளனர். பல புத்திசாலியான, அறிவுப்பூர்வமான மாணவர்கள் உள்ளனர். ஆனால் உயர் கல்வியை பெறுவதற்கு அவர்களுக்கு பொருளாதார ஆற்றல் இருப்பதில்லை. அவ்வாறான நிலைமையில் ஜமாஅத் உதவித் தொகை கொடுத்து அதுபோன்ற பிள்ளைகளை படிக்க வைக்கின்றது. ஆஃப்ரிக்காவில் நாங்கள் எந்த மார்க்க, இன, நிற வித்தியாசமுமின்றி ஒவ்வொருவருக்கும் கல்வி வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி தருகின்றோம்.

ஹுஸூர் அன்வர் கூறினார்கள்: கல்வி பயிலுங்கள். ஆராய்ச்சி செய்யுங்கள். Research செய்யுங்கள். முன்னேறிச் செல்வதற்கு முயற்சி செய்யுங்கள் என்று நாங்கள் கூறுகின்றோம்.

☆ ஹுஸூர் அன்வர் அவர்கள் ஆராய்ச்சி தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் Cloning செய்து இறைவனின் படைப்பினத்தில் மாற்றத்தை உருவாக்க முயற்சி செய்தால், மேலும் அப்படி ஏதாவது ஒன்றை உருவாக்கி விட்டாலும் கூட அதன் விளைவு அபாயகரமானதாக இருக்கும். மேலும் அது அழிவிற்கு வழி செய்யும். மேலும் மறுமையிலும் அதற்கு தண்டனை கிடைக்கும். ஏனென்றால் நீங்கள் இறைவனின் படைப்பில் மாற்றத்தை செய்கின்றீர்கள். அதற்கு உங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ஒருவேளை மனிதர்களிடம் Cloning செய்வதற்கு முயற்சி செய்தால் அதன் விளைவு மிக அபாயகரமான குழப்பமாக இருக்கும். அது மிக அபாயகரமான அழிவை அடிப்படையாக கொண்டதாக இருக்கும்.

☆ ஐரோப்பிய நாடுகளில் அறிவியல் துறைகளில் பெண்களுக்கான ஒதுக்கீடு 30 சதவிகிதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் மற்ற நாடுகளில் அவ்வாறு நடப்பதில்லை. ஜப்பானிலும் கூட அவ்வாறு இல்லை. இஸ்லாமிய நாடுகள் தொடர்பாக ஏதாவது Data தங்களிடம் உள்ளதா? என்று ஒரு நிருபர் கேட்டார்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாமிய நாடுகளின் Data என்னிடத்தில் இல்லை. முன்னேற்றமடைந்த நாடுகளின் மீது இது தொடர்பாக முறையீடு இருக்கும்போது பின்னர் மூன்றாம் உலக நாடுகளின் மீது என்ன முறையீடு இருக்க முடியும்? அவர்களில் ஆண்கள் கூட அவ்வளவு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இல்லை. அவ்வாறிருக்க பெண்களைப் பற்றி என்ன விஷயத்தை பேச முடியும்? அவர்களும் ஆண்களைப் போன்றே இருப்பார்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி நான் அறிந்துள்ளேன். இறை அருளால் பெண்கள் கல்வி பயில்கின்றனர். மேலும் கல்வி பயிலுங்கள் என்று அந்நியர்களுக்கும் கவனமூட்டுகின்றோம். நாங்கள் அந்நியர்களுக்கும் உதவியும் செய்கின்றோம்.

☆ பாகிஸ்தானில் அஹ்மதிகள் மீது ஏன் அநீதியிழைக்கப்படுகின்றது? என்று ஒரு விருந்தினர் கேள்வி கேட்டார். ஹுஸூர் அன்வர் அவர்கள் இந்தக் கேள்விக்கு விளக்கமான பதிலை வழங்கினார்கள். ஹுஸூர் அன்வர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த முன்னறிவிப்பை செய்திருந்தார்கள். அதாவது ஒரு காலம் வரும். அப்போது முஸ்லிம்கள் செயல் ரீதியில் தமது போதனையை மறந்திருப்பார்கள். திருக்குர்ஆன் அவர்களிடம் இருக்கும். ஆனால் அதன்படி அமல் செய்யப்பட மாட்டாது. அது இருளான காலமாக இருக்கும். ஆலிம்கள் தவறான வழிகாட்டுதல் வழங்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் சுயமே வழிகெட்டிருப்பார்கள். மேலும் மக்களையும் வழிகெடுப்பார்கள். எனவே அந்த காலத்தில் 14 ஆம் நூற்றாண்டில் அல்லாஹ் ஒரு சீர்திருத்தவாதியை அனுப்புவான். அவர் மஸீஹ் மற்றும் மஹ்தியாக இருப்பார். இஸ்லாத்தின் உண்மையான போதனை மற்றும் திருக்குர்ஆனின் போதனையை முன்னால் எடுத்துக் கொண்டு செல்வார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப வர வேண்டிய அந்த மஸீஹ் மற்றும் மஹ்தி வந்து விட்டார் என்று நாங்கள் நம்புகின்றோம். மேலும் நாங்கள் அவர் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆனால் இந்த எதிரி ஆலிம்கள் அதை மறுத்து விட்டனர். மேலும் வர வேண்டிய மஸீஹ் வானத்திலிருந்து வருவார் என்ற எதிர்பார்ப்பில் அவர்கள் இருக்கின்றனர். தற்போது இந்த ஆலிம்கள் தங்களது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக பொது மக்களை தவறாக வழிநடத்துகின்றனர். மேலும் முஸ்லிம்களின் பெரும்பான்மை அவர்களுக்கு பின்னால் சென்று கொண்டிருக்கின்றது. ஆலிம்களை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு அரசாங்கங்கள் அறிவுடன் செயல்பட்டால் பின்னர் விரைவாக யார் சரி என்பதும், யார் நேர்வழியில் இருக்கின்றார்? என்பதும் பொது மக்களுக்கு புரிந்து விடும். ஆலிம்களின் நடவடிக்கைகள் தவறாகும்.

எனவே இறைவன் புறமிருந்து தோன்றிய மஸீஹ் மற்றும் மஹ்தியை ஒப்புக் கொண்டதன் காரணமாக எங்கள் மீது அநீதியிழைக்கப்படுகிறது. இதுவே தங்களின் கேள்விக்கு சுருக்கமான பதிலாகும்.

☆ மற்றொரு கேள்விக்கு பதிலாக ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: மார்க்க விவகாரம் உள்ளத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. மார்க்கத்தில் எந்த பலவந்தமும் இல்லை. ஒவ்வொரு நாட்டின் குடிமகனும் எந்த மார்க்கத்தையும் மேற்கொள்ள முடியும். மார்க்கம் தொடர்பாக எந்த கடுமையும் காட்டப்படக் கூடாது. பிரச்சாரம் செய்வதற்கு கட்டளை உள்ளது. தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு கட்டளை உள்ளது. அதனை எட்ட வைக்க வேண்டும். ஒவ்வொரு மார்க்கத்திற்கும் தமது மார்க்கத்தை பிரச்சாரம் செய்வதற்கும், தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கும் உரிமை உள்ளது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: முதன் முதலில் மதீனாவில் அரசாங்கம் நிலைபெற்றது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம்களுக்கான தீர்ப்பு இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப இருக்கும். யூதர்களுக்கான தீர்ப்பு யூத ஷரீஅத்திற்கேற்ப இருக்கும். ஏனைய கோத்திரங்களுக்கான விவகாரங்களில் அவர்களின் தீர்ப்பு அவர்களின் மரபுகள் மற்றும் சட்டத்திட்டத்திற்கேற்ப இருக்கும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனவே நாட்டின் சட்டங்கள் ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு குடிமகனுக்கும் அவனுக்குரிய உரிமைகளை பெற்றுக் கொடுப்பதாகவும், ஒவ்வொரு குடிமகனுக்கும் அவருக்குரிய உரிமைகள் கிடைப்பதற்குரிய வழிமுறையாகவும் அமைய வேண்டும். அரசாங்கத்தின் பணி என்னவென்றால், ஒவ்வொரு குடிமகனுக்கும் அவருக்குரிய உரிமையை வழங்கக் கூடியதாக இருக்கவேண்டுமேயொழிய அவரது மார்க்கம் தொடர்பாக தீர்ப்பு வழங்கக் கூடியதாக இருக்கக் கூடாது.

ஜப்பானில் புத்த மதத்தைச் சார்ந்த மக்கள் உள்ளனர். இந்துக்கள் இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். ஏனைய மார்க்கத்தைச் சார்ந்த மக்களும் உள்ளனர். ஒவ்வொருவருக்கும் குடிமகன் என்ற முறையில் அவர்களுக்குரிய உரிமைகள் கிடைக்க வேண்டும். குடியுரிமையின் உரிமைகள் கிடைக்கவில்லையென்றால் பின்னர் குழப்பம் உருவாகும். எனவே மார்க்க சுதந்திரம் இருக்க வேண்டும். ஒருவரின் மார்க்கத்தில் தலையிடுவதை திருக்குர்ஆன் தடை செய்கிறது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம் நாடுகளில் இஸ்லாமிய ஷரீஅத்திற்கேற்ப சட்டங்களை உருவாக்க முடியும். ஆயினும் ஒவ்வொரு குடிமகனும் அவர்களின் மார்க்கத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: சில குடும்ப சட்டங்கள் திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ளன. ஒருவேளை முஸ்லிம் நாடு அதன்படி செயல்பட வைப்பதற்காக தனது சட்டத்தின் பகுதியாக அதனை ஆக்கிக் கொண்டால் அது சரிதான். ஆயினும் எந்தவொரு முஸ்லிம் நாட்டிற்கும் பலவந்தம் செய்து தமது குடிமக்களை அவர்களுக்குரிய உரிமைகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆக்குவதற்கு உரிமை இல்லை. அவ்வாறு செய்வது தவறாகும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ஐக்கிய நாடு சபையின் கீழ் மனித உரிமைகளின் சட்டங்களில் அனைத்து நாடுகளும் பங்கு பெற்றுள்ளன. அதற்கேற்ப ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமைகள் உள்ளன. எல்லா நாட்டிலும் இந்த செயல் திட்டத்திற்கேற்ப அமல் செய்ய வேண்டும். ஒவ்வொரு குடிமகனுக்கும் அவருக்குரிய உரிமைகள் கிடைக்க வேண்டும். ஜப்பானில் ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள அதே உரிமைகள் அமெரிக்காவிலும் இருக்க வேண்டும். அதே உரிமைகள் இஸ்லாமிய நாடுகளில் வசிக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ளன. அநீதி செய்யுங்கள் என்பது திருக்குர்ஆனின் கட்டளை அல்ல. மாறாக, நீதியுடன் நடந்து கொள்ளுங்கள் என்றே திருக்குர்ஆன் கூறுகின்றது. அல்லாஹ்விற்காக உறுதியான கண்காணிப்பாளராக திகழ்ந்து நீதிக்கு ஆதரவாக சாட்சி வழங்குங்கள். மேலும் ஒரு சமுதாயத்தின் மீதான பகைமை உங்களை நீதியிலிருந்து ஒருபோதும் விலக்க வேண்டாம் என்றே திருக்குர்ஆன் கூறுகின்றது. எனவே நீதம் செய்யுங்கள். மேலும் நீதத்துடன் பணி செய்யுங்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: எனவே நீதியுடன் ஒவ்வொரு குடிமகனுக்கும் அவருக்குரிய உரிமைகளை வழங்குவது திருக்குர்ஆனின் போதனையின் அடிப்படையில் அவசியம் ஆகும். பின்னர் அண்டை அயலாருக்குரிய உரிமைகளை வழங்குவதும் அவசியம் ஆகும். 40 வீடுகள் வரை அண்டை அயலாருக்கான உரிமையின் கீழ் வருகின்றது. பின்னர் இதுமட்டுமல்ல, முன்னேறிக் கொண்டு சென்றால் மட்டும் போதாது. அண்டை சமுதாயத்தின் உரிமையையும் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு நடந்து விட்டால் அண்டை சமுதாயத்தின் உரிமைகள் வழங்கப்பட்டால் பின்னர் எங்கும் எந்த சீர்கேடும் உருவாகாது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: அண்டை அயலாருக்குரிய உரிமைகள் தொடர்பாக எனக்கு எந்த அளவிக்கு வழியுத்தப்பட்டதென்றால், ஒருவேளை அவர் வாரிசாகவே ஆக்கப்பட்டு விடுவாரோ என்ற எண்ணம் எனக்கு தோன்றியது. எனவே இஸ்லாம் உரிமைகளை பெற்றுக் கொடுக்கின்றதே தவிர உரிமைகளை பறிப்பதில்லை.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: தீவிரவாதிகள் இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாதம் செய்கின்றனர் என்றால் பின்னர் அது இஸ்லாத்தின் போதனைக்கு எதிரானதாகும். அவர்கள் தமது சொந்த நலனுக்காக அவ்வாறு செய்கின்றார்களேயொழிய இஸ்லாத்தின் போதனையை பரப்புவதற்காக அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: நான் இந்த விஷயத்தை எல்லா இடங்களிலும் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன். அல்காயிதா, தாலிபான் போன்ற தீவிரவாத அமைப்புகள் உள்ளன. அவர்கள் இஸ்லாத்தின் பெயரால் இந்த தவறான செயலை செய்கின்றனர். அவர்களின் இந்த செயல் இஸ்லாத்தின் போதனைக்கு முற்றிலும் எதிரானதாகும். இன்னும் கூறப்போனால் அவர்கள் இஸ்லாத்திற்கு அவப்பெயரை சேர்க்கின்றனர்.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 05 May 2022 Issue No. 18

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இந்த பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி 8:00 மணி வரை தொடர்ந்தது. அதன் பிறகு விருந்தினர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது. அதன் பின்னர் விருந்தினர்கள் தனித்தனியாக ஹுஸூர் அன்வர் அவர்களுடன் கை குலுக்கிக் கொண்டார்கள். மேலும் ஹுஸூர் அன்வர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். ஹுஸூர் அன்வர் அவர்கள் பரிவுகூர்ந்து அந்த விருந்தினர்களுடன் உரையாடினார்கள். 8:45 மணியளவில் இந்த நிகழ்ச்சி முடிவுற்றது. 9:00 மணிக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் தொழுகை நடத்துவதற்காக பெறப்பட்டிருந்த ஹாலிற்கு வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடத்திற்கு சென்று விட்டார்கள்.

## 11 நவம்பர் 2013 (திங்கட்கிழமை)

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 5:15 மணியளவில் ஹோட்டலின் ஒரு ஹாலுக்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள்.

## Asakusa சுற்றுப்பயணம்

இன்று ஜப்பான் ஜமாஅத்தின் டோக்கியோ நகரத்தினுடைய ஒரு பகுதியான Asakusa விற்கு சுற்றுப்பயணம் செல்கின்ற நிகழ்ச்சி உருவாக்கப்பட்டிருந்தது. இந்தப் பகுதி டோக்கியோவின் மிக அதிகமான புராதன பகுதிகளை சார்ந்ததாக இருந்தது. தனது புராதன நகரத்தின் காட்சிகள் மற்றும் புத்த மதத்தின் வரலாற்று கோயில்கள் போன்றவற்றின் காரணமாக இந்த நகரம் பிரபலமானதாகும்.

நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த Asakusa Kannon Temple ஜப்பான் மக்களின் பழமை வாய்ந்த கோயில் ஆகும். அது Sessouji Temple என்றும் அழைக்கப்படுகிறது. பொது மக்களின் பார்வையில் kannon னின் கருணை தேவதையின் காரணமாக அனுதாபத்தின் அடையாளமாக கருதப்படுகிறது. அதன் வளாகம் மிகவும் பரந்துபட்டதாகும். வெளி வளாகத்தில் கண்காட்சிகளும், கடை வீதிகளும் அமைந்துள்ளன. ஒரு மாபெரும் எண்ணிக்கையில் அநேகமாக ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் தினமும் மக்கள் அந்த இடத்தை சுற்றிப் பார்க்கின்றனர். அங்கு அமைந்துள்ள கடை வீதி ஜப்பானின் பழமை வாய்ந்த கடை வீதியாகும். இன்றைய இந்த காலகட்டத்திலும் ஜப்பானுடைய அந்த பழமை வாய்ந்த கடை வீதியை பார்க்க முடியும்.

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 11:15 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹோட்டலில் இருந்து வெளியே வருகை தந்தார்கள். மேலும் இந்த இடத்தை சுற்றிப் பார்ப்பதற்கு வருகை தந்தார்கள். சுமார் 45 நிமிட பயணத்திற்குப் பிறகு 12:00 மணியளவில் ஹுஸூர் அன்வர் அவர்கள் Asakusa பகுதியை வந்தடைந்தார்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் வண்டியிலிருந்து வெளியே வந்தபோதும், அந்தப் பகுதியில் நுழைந்தபோதும், அந்தப் பகுதியை சுற்றிப் பார்த்தபோதும் ஹுஸூர் அன்வர் அவர்களின் ஒளிமிக்க முகம் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் அங்கு வந்திருந்த சுற்றுலா பயணிகளின் மையப் புள்ளியாக இருந்தது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் அநேகமாக அனைவரின் கைகளிலும் கேமராக்கள் இருந்தன. அவர்கள் அனைவரும் ஹுஸூர் அன்வர் அவர்களை தொடர்ந்து பார்த்துக் கொண்டும், புகைப்படம் எடுத்துக் கொண்டும் இருந்தார்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் எங்கெல்லாம் நடந்து சென்றார்களோ, எந்தப் பக்கமெல்லாம் முன்னேறிச் சென்றார்களோ அங்கு சுற்றியிருந்த நூற்றுக்கணக்கான கேமராக்கள் விண்ணில் உயர்த்தப்பட்டன. எல்லா பக்கமும் தொடர்ந்து புகைப்படம் எடுக்கப்பட்ட வண்ணம் இருந்தது. பின்னர் அத்துடன் நின்று விடவில்லை. மாறாக, நூற்றுக்கணக்கான குடும்பத்தினர்கள் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் மீண்டும் மீண்டும் ஹுஸூர் அன்வர் அவர்களிடம் விண்ணப்பம் செய்து ஹுஸூர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். பல்வேறு குடும்பத்தைச் சார்ந்த குழுவினர் பல இடங்களில் ஹுஸூர் அன்வர் அவர்களை நிறுத்தி புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கு விண்ணப்பித்தார்கள். சிறுவர்களும், சிறுமிகளும் ஹுஸூர் அன்வர் அவர்களுக்கு வலப்பக்கத்திலும், இடப்பக்கத்திலும், முன்னாலும், பின்னாலும் நின்று கொண்டு புகைப்படம் எடுத்தனர். ஒளிப்பதிவும் செய்து கொண்டனர். இன்று அல்லாஹ்வின் அருளால் நூற்றுக்கணக்கான மக்கள் ஹுஸூர் அன்வர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். மேலும் ஹுஸூர் அன்வர் அவர்களின் பரிவு மற்றும் பரக்கத்துகளிலிருந்து பங்கு பெற்றனர்.

தாய்லாந்திலிருந்து புத்த மதத்தைச் சார்ந்த ஒரு குழுவினரும் அங்கு அந்த வரலாற்று சிறப்புமிக்க கோயிலை சுற்றிப் பார்ப்பதற்கும், தங்களது இறைவணக்கத்தை நிவேற்றுவதற்காகவும் வந்திருந்தனர். அந்தக் குழுவின் உறுப்பினர்கள் ஹுஸூர் அன்வர் அவர்களுடன் கை குலுக்கும் நற்பேறு பெற்றனர். மேலும் ஹுஸூர் அன்வர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கும் நற்பேறு பெற்றனர்.

ஓர் ஈரானிய நண்பர் ஹுஸூர் அவர்களை தொலைவிலிருந்து பார்த்து விட்டு அருகில் வந்தார். மேலும் கை குலுக்குவதற்கு வாய்ப்பு கிடைக்கப் பெற்ற பிறகு விண்ணப்பித்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

ஓர் ஆஃப்ரிக்க பாதிரியும் ஹுஸூர் அன்வர் அவர்களிடம் வந்தார். மேலும் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். மேலும் ஹுஸூர் அன்வர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

மஸ்ஜித் ஃபஸல் லண்டனுக்கு அடுத்துள்ள Melrose Road ல் வசிக்கக் கூடிய ஓர் ஆங்கிலேய தம்பதி திடீரென ஹுஸூர் அன்வர் அவர்களை கண்டனர். அப்போது அவர்கள் ஹுஸூர் அவர்களிடம் வந்தனர். நாங்கள் அங்கு லண்டனில் பள்ளிவாசலுக்கு அருகில் தான் வசிக்கின்றோம். ஹுஸூர் அவர்கள் அங்கு வந்து செல்வதை நாங்கள் பார்த்துள்ளோம் என்று கூறினர். அவர்கள் இருவரும் ஹுஸூர் அன்வர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளும் நற்பேறு பெற்றனர்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் சுமார் 1:30 மணி நேரம் அங்கு இருந்தார்கள். அந்த அனைத்து நேரமும் ஜப்பானிய குடும்பத்தினர் ஹுஸூர் அன்வர் அவர்களின் அருளுக்குரிய இருப்பை சுற்றி வளைத்திருந்தார்கள். ஒவ்வொருவராக ஒவ்வொரு அடியிலும் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தனர்.

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 2:00 மணியளவில் அங்கிருந்து தங்குமிடமான Inter Continental ற்கு புறப்பாடு நிகழ்ந்தது. வழியில் ஓரிடத்தில் நின்று ஒரு Restaurent ல் மதிய உணவு அருந்தப்பட்டது. அதன் பிறகு அங்கிருந்து புறப்பட்டு 4:15 மணியளவில் ஹுஸூர் அன்வர் அவர்கள் ஹோட்டலை வந்தடைந்தார்கள். ஹுஸூர் அன்வர் அவர்கள் ஹோட்டலிலுள்ள ஒரு ஹாலிற்கு வருகை தந்து லுஹர் மற்றும் அஸர் தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

இன்று மாலை நிகழ்ச்சி நிரலுக்கேற்ப டோக்கியோ ஜமாஅத்தின் குடும்பங்களுடனான சந்திப்பும், அதன் பிறகு ஜப்பான் ஜமாஅத்தின் தேசிய செயற்குழு உறுப்பினர்களுடன் ஹுஸூர் அவர்களின் சந்திப்பும் நடைபெற இருந்தது. அதற்கான ஏற்பாடும் ஹோட்டலிலேயே செய்யப்பட்டிருந்தது.

(ஆதாரம்: உருது பத்ர் பத்திரிகை 13 மார்ச் 2014)

(தொடரும்...)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad